# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

புதன்கிழமை 08.12.2021 supeedsam.com supeedsam@gmail.com





# இந்தியாவுக்கு ஏன் பசில் அவசர பயணம்? விபரங்களை வெளியிடுங்கள் :ரணில் கோரிக்கை

(காந்தன்)

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் திடீர் இந்திய விஜயம் தொடர்பான அனைத்து விவரங்களையும் வெளியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், நிதியமைச்சரின் திடீர் இந்திய விஜயம் கவலையளிப்பதாகவும் கூறினார்.

02 ஆம் பக்கத்தில்...



## பரகசியமாகும் இரகசியங்கள்!
# கிழக்கின் இருப்பா? கிழக்கில் நெருப்பா?



ஜி.ஸ்ரீநேசன், முன்னாள் பா.உ, மட்டக்களப்பு

வாகரைப் பிரதேச செயலாத்திற்குட்பட்ட மாங்கேணிப் பக்கமாக 5000 குடும்பங்களை குடியேற்றுவதற்காக மட்டக்களப்பு அரசியல்வாதி ஒருவர் திட்டமிடுகின்றார். உண்மையில் காணியற்ற எமது தமிழ் மக்களுக்காக அக்குடியேற்றம் நடைபெற்றால் வரவேற்கலாம்.

02 ஆம் பக்கத்தில்...

# கரையோதுங்கும் சடலங்கள்
## காணாமல் போனவர்களின் உறவினர்கள் அச்சத்தில்

(யாழ்.கீதன்)

யாழ்.மாவட்ட கடற்கரைகளில் கரையொதுங்கும் சடலங்கள் தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளியாகாத நிலையில், காணாமல் போனவர்களின் உறவினர்கள் மத்தியில் அச்சங்கள் தோன்றியுள்ளன என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரமேசந்திரன் தெரிவித்தார்.



02 ஆம் பக்கத்தில்...

# பிரதமர் பதவிக்கு ரணிலை நியமிக்கும் திட்டம் இல்லை

(காந்தன்)

கோட்டாபய அரசாங்கத்தில் பிரதமர் பதவிக்கு ரணில் விக்ரமசிங்கவை நியமிக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை

02 ஆம் பக்கத்தில்...

## சா.தர.பரீட்சையில்
# சித்தியடையாதோருக்கு மகிழ்ச்சியான செய்தி

(ஊர்காவலன்)

கல்வி பொதுதராதர சாதாரண தர பரீட்சை வரை கல்வி கற்ற போதிலும் பரீட்சையில் சித்தியடையாத ஒரு லட்சம் பேருக்கு அரசாங்க வேலை வாய்ப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச பணியில் சேர்த்துக்

02 ஆம் பக்கத்தில்...

# கல்முனை மாநகர சபையின் வரவு செலவுத் திட்டத்திற்கு கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிக்க வேண்டும்

(செல்லையா பேரின்பராஜா)

கல்முனை வாழ் தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாசையாக இருந்துவரும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் உள்ள கல்முனை மாநகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கபப்டும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை

02 ஆம் பக்கத்தில்...

# குறிஞ்சாக்கேணி பாலத்தை விட மோசமான நிலையில் கிண்ணியா வைத்தியசாலை

(பைஷல் இஸ்மாயில்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தை விட மோசமான நிலைப்பாட்டிலேயே கிண்ணியா வைத்தியசாலை உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தை விட மோசமான நிலைப்பாட்டிலேயே கிண்ணியா வைத்தியசாலை உள்ளது. கிண்ணியா வைத்தியசாலையை

02 ஆம் பக்கத்தில்...








# நுண்கடன் வலையில் சிக்கி 200 பெண்கள் பலி:
## ஐ.நா.விசேட தூதுவர் பகீர் தகவல்

எந்தவொரு ஆய்வுக்கும் உட்படுத்தப்படாத நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்று வட்டி செலுத்த முடியாமல் 200ற்கும் மேற்பட்ட இலங்கை பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் கிராமப்புற பெண்களின் உயிரைப் பறிக்கும் நுண்கடன் திட்டம் ஏற்படுத்திய அழிவின் அளவு அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் நாட்டிற்கு வந்த ஐ.நாவின் விசேட தூதுவரால் வெளிப்படுத்தப்பட்டது.

கடனுக்கு அதிக வட்டி விகிதங்கள் வசூலிக்கப்படுவதால் பல பெண்கள் கடனுக்கு இரையாகிறார்கள். இதன் விளைவாக, கடந்த

02 ஆம் பக்கத்தில்...









## பேரறிவாளன் விவகாரம்
# தமிழக ஆளுநர் காலம் தாழ்த்தியதை ஏற்க முடியாது
## உயர்நீதிமன்றம் அறிவிப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பேரறிவாளனுக்கு எதிரான வழக்கு விடயத்தில் முடிவெடுக்காமல், தமிழக ஆளுநர் காலம் தாழ்த்தியதை எந்த வகையிலும் ஏற்க முடியாது என்று உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்

02 ஆம் பக்கத்தில்...

## குறிஞ்சாக்கேணி பாலத்தை விட மோசமான நிலையில் கிண்ணியா

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் உபயோகிக்கின்றனர். இங்கு ஒரு நாளில் 550 வெளிநோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். 100 பேர் அனுமதிக்கப்படுகின்றனர். மாதம் 160 பிரசவங்கள் நிகழ்கிறது.

திருகோணமலை வைத்தியசாலைகளிலுள்ள வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையை பார்க்கும்போது (2015 தரவுகளுக்கமைய )

திருகோணமலை வைத்தியசாலையில் 134301 நோயாளிகளும், தரம் அ யிலுள்ள கந்தளாய் வைத்தியசாலையில் 129627 நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். ஆனால் கிண்ணியா வைத்தியசாலையில் 159043 நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர்.

இதன் மூலம் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள வைத்தியசாலையை விட கிண்ணியா வைத்தியசாலையில் அதிக நோயாளர்கள் சிகிசிச்சை பெறுகின்றனர் என்பது தெளிவாகிறது. இந்த வைத்தியசாலையின் ஆளணி மற்றும் பௌதீக வளங்களை எடுத்து நோக்கினால் தள வைத்தியசாலைக்குரிய வசதிகளும் இல்லை. அங்கு 317 ஆளணியின் தேவை இருந்தும் 211 பேரே கடமையாற்றுகின்றனர். இங்கு சத்திர சிகிசிச்சை நிபுணர் இன்மையால் கடந்த 4 மாதங்களாக சாத்திரசிகிசிச்சை எதுவும் நடைபெறவில்லை. நோயாளிகள் சிறிய சத்திர சிகிசிச்சைக்கும் திருகோணமலை வைத்தியசாலைக்கே அனுப்பப்படுகின்றனர்.

பிரசவ வாட்டில் கட்டிலை இருவர் பயன்படுத்தும் நிலையும் தரையில் கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார் உரங்கும் நிலையும் காணப்படுகிறது. சுனாமியால் முற்றாக அழிக்கப்பட்டபின் இந்த வைத்தியசாலை இத்தாலி அரசின் நிதி உதவி மூலம் 10 வருட கால உத்தரவாதத்துடன் நிர்மாணிக்கப்பட்டு 17 வருடங்கள் சென்ற பின்பும் இந்த வைத்தியசாலை எந்த வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் பிரதேச வைத்தியசாலையை விட மோசமான நிலையில் இயங்கி வருகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை வைத்தியசாலையிலும் கந்தளாய் வைத்தியசாலையிலுமே ஐஇக் கட்டில்கள் காணப்படுகின்றன. அதில் திருகோணமலை வைத்தியசாலையில் 6 ஐஇக் கட்டில்கள் மட்டுமே உள்ளது. கந்தளாய் வைத்தியசாலையில் 3 ஐஇக் கட்டில்கள் மட்டுமே உள்ளது.

நான்கு இலட்சம் மக்கள் வாழும் மாவட்டத்தில் ஐஇக் கட்டில்கள் போதுமானதாக உள்ளதா என்ற கேள்வியை கேட்க விரும்புகிறேன். திருகோணமலையில் எந்த வைத்தியசாலையிலும் விசேட பிரிவுகள் இல்லை. இதனால் சிறுநீரக, இருதய மற்றும் புற்று நோயாளிகள் மட்டக்களப்பு, அனுராதபுரம் போன்ற வைத்தியசாலைகளுக்கே சிகிசிச்சைகளுக்காக செல்ல வேண்டிய ஒரு நிலை காணப்படுகிறது.

இதனால் பதவிசிரிபுராவில் சிறுநீரக பிரிவும், கிண்ணியா மற்றும் மூதூர் வைத்தியசாலைகளில் இருதய நோய் பிரிவும், திருகோணமலையில் கண் நோய் பிரிவும், கந்தளாயில் புற்று நோய் பிரிவும் அமைக்கப்படல் வேண்டும். அத்துடன் கிண்ணியா மூதூர் வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல வருடகாலமாக முன்வைக்கப்படுகிறது. அவ்வாறு இந்த வைத்தியசாலைகள் மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டால் இங்குள்ள பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வு கிடைக்கும்.

ஆகவே இது தொடர்பாக அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் தோப்பூர், ஈச்சளம்பற்று, புல்மோட்டை, பதவிசிறிபுர , கோமரங்கடவல வைத்தியசாலைகளும் தரமுயர்த்தப்படவேண்டும் என்ற கோரிக்கை அப்பகுதி மக்களால் முன்வைக்கப்படுகிறது. இதையும் அமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

## கல்முனை மாநகர சபையின் வரவு செலவுத் திட்டத்திற்கு கூட்டமைப்பு

மாநகரசபை உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக்கட்சியின் கல்முனை தொகுதி கிளையின் செயலாளர் சி.ஜெயக்குமார் இலங்கை தமிழரசுக்ட்சியின் வாலிபர் முன்னணியின் துணைச்செயலாளர் அ.நிதான்சன் ஆகியோர் கல்முனை ஊடக மையத்தில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்களின் கோரிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகள் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றித்து பயணிக்க வேண்டும் என்று செயற்பட்டு வருகின்றனர். எனினும் கல்முனை தொகுதியை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹாரீஸ் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதை தடுப்பதற்காகவே தான் இருபதாவது அரசியலமைப்புக்கும் அதன் பின்னர் 2022 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவு வழங்கியதாக சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் பகிரங்கமாக கூறியுள்ளார் .

இதே போன்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினருமாகிய ஹாபீஸ் நஸீர் அகமட் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை பாராளுமன்றத்தில் அப்பட்டமாக கூறியுள்ளார். தமிழ் மக்கள் போட்ட பிச்சையினால் தான் முதலமைச்சராக இருந்ததை மறந்து இனவாதம் கக்குகின்றார்.

கல்முனை மாநகரசபையானது தமிழ் பிரதேசங்களை பல வழிகளிலும் புறக்கணிப்பு செய்து வருவதனை இச்சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

அரச கட்டமைப்பின் நிருவாக நடைமுறையினை முறையாக மேற்கொண்டு வரும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 1989 ஆம் ஆண்டில் இருந்து குறைமாத குழந்தைபோல் உள்ளது. 200 க்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும் 29 கழராம சேவகர் பிரிவுகளை உடைய இப்பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு தடையாக உள்ளவர்களுக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஆதரவு வழங்குவார்களாயின் கல்முனை வாழ் பொது மக்களும் குறிப்பாக இளைஞர்களும் எதிர்காலத்தில் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்பதையும் இத்தருணத்தில் கூறிக்கொள்கின்றோம் என்றனர்.

## பரகசியமாகும் இரகசியங்கள்! கிழக்கின் இருப்பா? கிழக்கில் நெருப்பா?

ஆனால் இந்தக் குடியேற்றத்தின் உள் நோக்கம் என்னவென்றால் தனக்கு ஆதரவான 5000 குடும்பங்களைக் குடியேற்றுவதன் மூலமாக எதிர்வரும் தேர்தல்களில் 15000 வாக்குகளை

நிலையான கையிருப்பாகத் தக்க வைத்துக் கொள்ளலாம் என்று அந்த அரசியல்வாதி திட்டம் தீட்டியுள்ளார். . இதிலுள்ள இன்னுமோர் சூழ்ச்சித் திட்டம் என்னவென்றால் தனது அயல்மாகாணத்தில் இருந்து பெரும்பான்மை சமூகத்தவர்களையும் குடியேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

அண்மையில் ஞானசார தேரர் மட்டக்களப்புக்கு வருகை தந்த போது வாழைச்சேனையில் மக்கள் சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது. அதில், தேரர்கள் பக்கமாக இருந்து ஒரு கருத்து வெளிவந்துள்ளது. அக்கருத்தின்படி தற்போது மட்டக்களப்பில் சிங்களவர்கள் 37 மட்டும் உள்ளார்கள். இதற்கு முன்பு 117 அளவில் மட்டக்களப்பில் இருந்ததாகக் கூறியுள்ளார். இத்திட்டத்தின்படி அயல் மாகாணம் மாவட்டங்களில் இருந்து சிங்கள மக்களை மட்டக்களப்பில் குடியேற்றுவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ளது.

இந்த இடத்தில் அறிவுள்ள பற்றுள்ள தமிழர் ஒருவர் கலந்து கொண்டுள்ளார். தனது சிங்கள மொழிப் புலமையை வைத்துக் கொண்டு உண்மையான விளக்கம் ஒன்றினை அளித்து வந்திருந்த தேரர்களுக்குத் தெளிவை ஏற்படுத்த முயற்சி செய்துள்ளார். அதன்படி 1946 காலத்தில் மட்டக்களப்பும் அம்பாறையும் ஒரே மாவட்டமாக இருந்த காலத்தில் சிங்களவர்கள் 11 வீதமாக இருந்திருக்க முடியும் என்று கூறி அவர்களது கருத்திற்குரிய உண்மை நிலையை வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் அதில் கலந்து கொண்ட மாங்கேணியில் குடியேற்றத்தை ஏற்படுத்த விரும்பும் கிழக்கு இருப்புக் கட்சிக் கற்றுக்குட்டிகளுக்கு ஒன்றுமே புரியாமல் மௌனிகளாக இருந்தனர். அந்தப் புத்திசாலியான தமிழர் ஒருவர் அங்கு செல்லாது இருந்தால் தேரர்களின் கதைக்குக் கற்றுக்குட்டிகள் ஆமாம் தலையாட்டலைக் செய்து வந்திருப்பார்கள். கிழக்கு இருப்பு அரசியல்வாதி வாகரைப் பிரதேசத்தில் சிங்களவர்களைக் குடியேற்றியாவது தனது அரசியல் இருப்பையும், பதவியையும் பாதுகாக்க நினைக்கிறார்.

தேரர்களும் பொது சனப் பெரமுனவினரும் மட்டக்களப்பில் இருந்து மாகாண சபை, பாராளுமன்றத்திற்குச் சிங்களப்பிரதிகளைத் தெரிவு செய்யத்துடிக்கிறார்கள். ஆனால் இங்குள்ள கற்றுக்குட்டிக் கிழக்கிருப்பு அரசியல்வாதி சிங்களவர்களின் வாக்கைப் பெற்றாவது தொடர்ந்தும் பாராளுமன்றம் செல்லலலாம்,எதிர்காலத்தில் அமைச்சர் ஆகலாம் என்று மனப்பால் குடிக்கிறார். மட்டக்களப்பில் சிங்களவர்களைக் குடியேற்றிக் கிழக்கைப் பாதுகாப்பது என்பது புதிய கண்டுபிடிப்பாகவே அமைய முடியும்.

மயிலத்தமடு, மாதவனை, கெவுளியாமடு ,காரமுனை, நெடியகல் மலை, அரணகம்பிலயில் இருந்து மட்டக்களப்பு நோக்கிய 23 கி.மீ காட்டுப்பாதை, நெடியகல்மலை 5கி.மீ காட்டுப்பாதை இவை சார்ந்த இந்த அரசாங்கத்தின் முன்னெடுப்புகள் எல்லாம் மட்டக்களப்பில் அவசர சிங்களக் குடியேற்றங்களுக்கான ஆரவாரங்களாகவே அமைகின்றன. இவற்றைக் கண்டும் காணாமல் இருக்கின்ற கிழக்கு இருப்பு வாய் வீச்சாளர்கள் தமது பதவிகள், சுக போகங்களுக்காக மட்டக்களப்பையே அடைமானம் வைப்பதற்குத் துணிந்து விட்டார்கள் போல் இருக்கிறது. இவ்வாறெல்லாம் ஆட்சியாளர்களுக்கு அனைத்தையும் தாரை வார்த்துக் கொடுத்து விட்டு, கைகளையுயர்த்தி, தலைகளை அசைத்து விட்டு நாங்கள் அபிவிருத்தி செய்கிறோம்,உரிமைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் கேளுங்கள் என்பது எவ்வளவு மட்டரகமான அறிவீனமான செயல்களாக அமையும் என்பதை மக்கள்தான் சிந்திக்க வேண்டும்.

சாராயப் போத்தல், சோற்றுப் பார்சல், கைநோட்டுக்கையூட்டு தேர்தல் அரசியல் மக்களின் காணிகள், மண்வளத்தை அபகரிப்பதாகவும், அழிப்பதாகவுமே அமைய வாய்ப்புள்ளது. அது தான் இப்போது நடக்கிறது. காணி அபகரிப்புகள், குடியேற்றங்கள் நடைபெறுகின்றபோது கிழக்குவாதிகள் ஓடி மறைந்து விடுகிறார்கள். அது ஒரு புறம் இருக்க இதற்கு எதிராகப் போராடுகின்ற இளைஞர்களைக் காட்டிக் கொடுத்து சிறைக்குள் தள்ளுகின்ற வேலைகளையும் கிழக்கு இருப்புவாதிகளோடு ஒட்டிப் பிழைப்பர்கள் செய்து வருகின்றனர். இவர்களுக்கு உளவுப்பிரிவுகளில் இருந்து சம்பளங்கள் கொடுக்கப்படுவதாகவும் அறிய முடிகிறது. இவையும் கிழக்கு இருப்பர்களின் மர்ம அரசியலின் ஒரு பகுதியாகவுள்ளது. கிழக்கு இருப்பு வாதிகளால் கிழக்கு பாதுகாக்கப்படுகின்றதா? அல்லது குடியேற்றத்திற்கு கையளிக்கப்படுகின்றதா? என்பது தான் மக்களின் கேள்வியாகும்.




## பேரறிவாளன் விவகாரம் தமிழக ஆளுநர் காலம்

காந்தி கொலை வழக்கில் தன் மீதான குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்பதால் தன்னை வழக்கிலிருந்து விடுவிக்கக்கோரி உயர்நீதிமன்றில் பேரறிவாளன் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவின் விசாரணை இன்று இடம் பெற்றபோது, வழக்கில், மத்திய அரசாங்கத்தின் சார்பில் முன்னிலையான பிரதி மன்றாடியார் நாயகம் துஷார் மேத்தா மனு விசாரணையை மற்றும் ஒரு திகதிக்கு ஒத்தி வைக்க வேண்டும் என கோரினார்.

இதன்போது கருத்து தெரிவித்த நீதியரசா்கள், நீண்ட நாட்களாக பேரறிவாளன் விவகாரத்தில் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை. அத்துடன் பேரறிவாளன் வழக்கு தொடர்பான ஆவணங்கள் மீது முடிவெடுக்காமல், ஆளுநர் காலம் தாழ்த்தியதை எந்த வகையிலும் ஏற்க முடியாது எனவும் குறிப்பிட்டனர்.

எனவே மாநில அரசாங்கத்தின் தீர்மானத்தின் மீது ஆளுநர் முடிவு எடுக்க வேண்டும். அதேநேரம் மீண்டும் இந்த மனுவின் விசாரணையை ஒத்திவைக்க கோரக்கூடாது என்றும் நீதியரசர்கள் தெரிவித்தனர்.

இந்த வழக்கு தாமதிக்கப்பட்டு வருவதால், இறுதி முடிவு வரும் வரை பேரறிவாளனுக்கு பிணை வழங்க வேண்டும் என அவரது சட்டத்தரணி கோரினார்.

இதனை பரிசீலிப்பதாக கூறிய நீதியரசர்கள், மனு மீதான விசாரணையை ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைத்தனர்.

## நுண்கடன் வலையில் சிக்கி 200 பெண்கள் பலி:

சில ஆண்டுகளில் 200ற்கும் மேற்பட்ட பெண்கள் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது, எனச் சமகால அடிமைத்தனம் தொடர்பான ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் டொமோயா ஒபோகடா கொழும்பில் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், கல்வியாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் சுரண்டலுக்கு ஆளானவர்கள் ஆகியோரை அவர் சந்தித்ததாக, ஐ.நாவின் இலங்கைக்கான தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தேர்தல் வாக்குறுதியானது இலட்சக்கணக்கான கிராமப்புற பெண்களைக் கடன் பொறியிலிருந்து காப்பாற்றுவதாகும். சில வங்கிகளுக்கு சட்டப்பூர்வ உரிமை கூட இல்லை, சில நிதி நிறுவனங்கள் கடந்த காலங்களில் எந்த கட்டுப்பாடும் இல்லாமல் நாடு முழுவதும் நெருப்பு வட்டியைவிட அதிக வட்டிக்கு வழங்கிய நுண்கடன் காரணமாக, இலட்சக்கணக்கான பெண்கள் அழுத்தத்தில் உள்ளனர்.

அத்தகைய பெண்களுக்கு விரைவான நிவாரணம் அளிக்கும் வகையில், நியாயமற்ற முறையில் வழங்கப்பட்ட சிறு கடன்கள் இரத்து செய்யப்படும், என சுபிட்சத்தின் நோக்கு தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்பதையே ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் வெளிப்படுத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சுரண்டல் நுண்கடன் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் அரசாங்கம் இதுவரை எந்தவொரு பயனுள்ள அல்லது சரியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதில் நான் ஆழ்ந்த கவலையடைகின்றேன்.

இதன் விளைவாக, அவர்கள் தங்கள் வேலையைத் தடையின்றி தொடர அனுமதிக்கப்படுகிறார்கள், என டொமோயா ஒபோகடா தெரிவித்துள்ளார். தனது விஜயத்தின் போது முன்வைக்கப்பட்ட பல பரிந்துரைகளை, இலங்கை அரசாங்கம் கவனத்தில் எடுத்துள்ளதாகத் தெரிவித்த விசேட பிரதிநிதி, இந்த கடன் வழங்கும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கு சட்டமியற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சமகால அடிமைத்தனம் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகடாவின் இறுதி அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜெனீவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## சா.தர.பரீட்சையில் சித்தியடையாதோருக்கு

கொள்ளும் வேலைத்திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இதுவரையில் 45000 பேர் அரச பணியில் இணைத்து கொள்ளப்பட்டுள்ளதாக, இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

2015 – 2019 ஆண்டு காலப்பகுதியினுள் 22,145 பேர் முழுமையான அரச சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதிவியேற்ற பின்னர் அபிவிருத்தி அதிகாரிகள் பதவிக்கு மாத்திரம் 60,000 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த 60,000 பேருக்கு வழங்கப்பட்ட பயிற்சி காலம் நிறைவடைந்து அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக சாதாரண தரம் கற்ற அல்லது சதாரண தர பரீட்சையில் சித்தியடையாத ஒரு லட்சம் பேரை அரச பணியில் இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதில் பயிற்சிகளை நிறைவு செய்த 45000 பேர் பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என ராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரதமர் பதவிக்கு ரணிலை நியமிக்கும் திட்டம்

முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

2022 ஜனவரியில் பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படவுள்ளதாகவும் அதற்குப் பதிலாக பசில் ராஜபக்ச அல்லது ரணில் விக்ரமசிங்க அந்த பதவிக்கு நியமிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகி இருந்த நிலையில் ஊடகவியலாளர் ஒருவரினால் கேள்வி எழுப்பட்ட நிலையில் அதற்குப் பதிலளிக்கும் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் பிரதமர் பதவியில் எந்த மாற்றமும் ஏற்படாது என அமைச்சரவை இணைப்பேச்சாளர் பதிலளித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்துடன் இணைய உள்ளதாக கடந்த சில தினங்களாக செய்திகள் வெளியாகி வந்தன. எனினும் ஐக்கிய தேசியக் கட்சி இந்த செய்தியை மறுத்திருந்தது.

அபுதாபியில் நடைபெற்ற இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில் மாநாட்டில் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச மாத்திரமல்லாது, முன்னாள் பிரதமரான ரணில் விக்ரமசிங்கவும் கலந்துகொண்டார் குறிப்பிடத்தக்கது.

## கரையொதுங்கும் சடலங்கள் காணாமல்

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கரையோரங்களில் கடந்த வாரம் ஆறு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. இது தொடர்பில் எந்த விதமான தகவல்களும் வெளிவரவில்லை. அதனால் காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்கள் வெளிவராத நிலையில் இந்த சடலங்கள் கரை ஒதுங்குகின்றன.

கடற்கரைகளில் சடலங்கள் ஒதுங்கி வருகின்றன எனில் கடலில் விபத்துக்கள் நடைபெற்று இருக்க வேண்டும், அப்படியில்லையெனில் இலங்கை மீனவர்கள், அல்லது இந்திய மீனவர்களினது மீன் பிடி படகுகள் விபத்துக்கு உள்ளாகி இருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறு விபத்துக்கள் நடைபெற்றதாக தகவல் இல்லை. இதனால் காணாமல் போனவர்களின் உறவுகள் அச்சத்தில் உள்ளனர். ஆனால் அரசாங்கம் எந்த விசாரணைகளையும் முன்னெடுக்கவில்லை.

மக்களுக்கு விபரங்களை விரைந்து கொடுக்க வேண்டும். காவல்துறையினர், கடற்படை மீது அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே காவல்துறை மற்றும் கடற்படை ஆகியவை இந்த சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை தீவிரப்படுத்தி, அதன் உண்மை தன்மைகளை விபரங்களை விரைவாக வெளிப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இந்தியாவுக்கு ஏன் பசில் அவசர பயணம்?

மேலும் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எந்தவொரு நிதி அமைச்சரும் நாட்டை விட்டு வெளியேறியதில்லை என்றும் ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதார மீட்சிக்கான அனைத்து நிதி விவரங்கள் மற்றும் திட்டங்களை சபையில் முன்வைக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கும் நிதி அமைச்சருக்கும் உள்ளதாக ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் நாட்டின் தற்போதைய வெளிநாட்டு கையிருப்பை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் சில நாட்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், அதற்கான ஆவணம் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.



# அடைத்தொழிற்சாலை பஸ் விபத்தில் 26 பேர் படுகாயம் சாரதிக்கு கொரோனா தொற்று உறுதி





(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை கண்டி பிரதான வீதி கப்பல்துறை மங்குபிரிஞ் பகுதியில் ஆடை தொழிற்சாலைக்கு சொந்தமான தனியார் பஸ்ஸொன்று விபத்துக்குள்ளானதில் இதுவரை 26 பேர் காயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சீனக்குடா பொலிசார் தெரிவித்தனர்

குறித்த விபத்து நேற்று (07) 6. 45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குச்சவெளி பிரதேசத்தில் இருந்து கப்பல்துறை தனியார் ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் செல்லும் போது இரண்டு பஸ்களை முந்திச்செல்ல முற்பட்டபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதியத்தினாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக சீனக்குடா பொலிசார் தெரிவித்தனர்

விபத்துக்கானவர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் பஸ் சாரதியான ஜெயபுர தம்பலகாமத்தை சேர்ந்த என்.டி.சமந்த (34வயது) என்பவருக்கு மேற்றக்கொள்ளப்பட்ட ஆண்டிஜன் பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

மேலும் இவ் விபத்து பஸ் சாரதியின் கவனயீனத்தினால் ஏட்பட்டுள்ளதாகவும் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நுவரேலியா மாவட்டத்தில் 5 எரிவாயு அடுப்புகள் வேடித்தன



(க.கிஷாந்தன்)

நுவரெலியா நகரம் மற்றும் நுவரெலியா மாகொட ஆகிய பிரதேசங்களில் உள்ள வீடுகளில் நேற்று (07) மதியம் எரிவாயு அடுப்புகள் வெடித்துள்ளது.

குடியிருப்பாளர்கள் கேஸ் அடுப்பில் சமையல் செய்து கொண்டிருந்த போது, திடீரென கேஸ் அடுப்பு வெடித்ததால், கேஸ் அடுப்பு பலத்த சேதம் அடைந்தது.

இந்த வெடிப்பு சம்பவத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன் நுவரெலியா பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, நானுஓயா எடின்புரோ தோட்டத்திலும், பூண்டுலோயா ஹெரோ தோட்டத்திலும், அட்டன் வெளிஓயா மேற்பிரிவு தோட்டத்திலும் நேற்றைய தினம் (07) எரிவாயு அடுப்புகள் வெடித்துள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடதக்கது.

## கிழக்கில் இன ரீதியான கல்வி அலுவலகங்களினால் இன ஐக்கியம் சீர்குலைவு

### கிழக்கு கல்வி நிருவாக அதிகாரிகள் சங்கம் கவலை

(அஸ்லம் எஸ்.மௌலானா)



தேசிய கல்வி நிருவாகக் கொள்கைக்கு முரணாக கிழக்கு மாகாணத்தில் இன ரீதியாக வலயக் கல்வி அலுவலகங்களும் கோட்டக் கல்வி அலுவலகங்களும் உருவாக்கப்பட்டுள்ளமை இன ஐக்கியத்தை சீர்குலைக்கும் செயற்பாடாகும் என இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்;

நாட்டில் பிரதேச செயலகம் ஒன்றிற்கு ஒரு கோட்டக் கல்வி அலுவலகம் என்பது கல்வி அமைச்சின் தேசிய கல்வி நிருவாக கொள்கையாகும். இதை மீறி நாட்டில் வேறு மாகாணங்களில் கோட்டக் கல்வி அலுவலகம் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் தேசியக் கல்வி நிருவாகக் கொள்கைக்கு முரணான வகையில் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரிவு என்ற ரீதியில் கோட்டக் கல்வி அலுவலகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக கிண்ணியா கல்வி வலயத்தில் குறிஞ்சாக்கேணி, முள்ளிப்பொத்தானை கோட்டக் கல்வி அலுவலகங்களும் திருமலை கல்வி வலயத்தில் புல்மோட்டை கோட்டமும் மூதூர் வலயத்தில் தோப்பூர் கோட்டமும் திருக்கோவில் வலயத்தில் பொத்துவில் தமிழ் பிரிவு கோட்டமும் தனிக் கோட்டங்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

தேசியக் கல்விக் கொள்கைக்கு முரணான வகையில் இக்கல்விக் கோட்டங்கள் என்ன அடிப்படையில் எவரது அனுமதியின் பேரில் ஆரம்பிக்கப்பட்டது என்பது பற்றி கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டும்.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் தமிழ் கல்வி வலயம், முஸ்லிம் கல்வி வலயம் என்ற ரீதியில் இனங்களுக்கென தனித் தனியாக மட்டக்களப்பு மத்தி, திருக்கோவில், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கல்வியூடான சமாதானம், சகவாழ்வு, இன சௌஜன்யம் என்பன இவ்வாறான கல்வி வலயங்கள் மற்றும் கோட்டங்கள் மூலம் பாதிக்கப்படுகின்றன. இந்நிலையில் தமிழ் கல்வி வலயங்களில் முஸ்லிம் ஆசிரியர்களையும் முஸ்லிம் கல்வி வலயங்களில் தமிழ் ஆசிரியர்களையும் கடமையாற்றுமாறு எவ்வாறு பணிக்க முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## கல்முனை, பாண்டிருப்பில் ஊருக்குள் கடல்; ஆலயங்கள், வீடுகளுக்கு பாதிப்பு






(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசங்களில் ஏற்பட்ட கடற் கொந்தளிப்பு காரணமாக கடற்கரை வீதியையும் தாண்டி குடியிருப்பு பகுதிக்குள் கடல் நீர் புகுந்து, வெள்ளக்காடாக மாறியதையடுத்து மாநகர சபையின் கனரக இயந்திரங்கள் மூலம் கடல் நீரை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று (07) அதிகாலை இப்பிரதேசத்தில் திடீரென கடற்கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் கல்முனை மாமாங்க விநாயகர் ஆலயம் மற்றும் பாண்டிருப்பு விஷ்ணு ஆலயம் உள்ளிட்ட பகுதிகளும் பல வீடு, வளவுகளும் வெள்ளத்தில் மூழ்கி, பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

இதனால் இப்பிரதச மக்கள் அச்சமும் கலவரமும் அடைந்த நிலையில் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர். இதையடுத்து கல்முனை மாநகர சபை உறுப்பினரான ஹென்றி மகேந்திரன், மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதையடுத்து, மாநகர சபையின் கனரக இயந்திரங்கள் மூலம் அப்பகுதிகளில் தேங்கியுள்ள கடல் நீரை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலமாக கல்முனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசங்களில் கடலரிப்பு ஏற்பட்டு வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் அவசர நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனக் கோரி கல்முனை மாநகர சபையில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோறளைப்பற்று பிரதேச செயலாளர் வேற்றி கிண்ணத்தை சுவீகரித்தது மட்டக்களப்பு மாவட்ட செயலக அணி!!



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கோறளைப்பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நான்காவது தடவையாக நடாத்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கிடையிலான

கோறளைப்பற்று பிரதேச செயலாளர் வெற்றி கிண்ண கிரிக்கட் சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட செயலக அணி வெற்றி கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டிற்கான கோறளைப்பற்று பிரதேச செயலாளர் வெற்றி கிண்ண மென்பந்து கிறிக்கட் சுற்றுப்போட்டியின் முதல் சுற்று போட்டிகள் கடந்த வருடம் நிறைவுபெற்றிருந்த நிலையில் கொவிட் 19 தொற்று காரணமாக சுற்றுபோட்டியானது இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இச்சுற்றுப்போட்டியின் அரையிறுதி போட்டிகள் கடந்த 30.11.2021 திகதி முதல் ஆரம்பமாகிய நிலையில் வாழைச்சேனை வீ.சி மைதானத்தில் போட்டிகள் இடம்பெற்றிருந்தது.

இந் நிலையில் கடந்த 03.12.2021 ஆந் திகதி வாழைச்சேனை பஸ் டிப்போ அணியினரிற்கும் மாவட்ட செயலக அணியினரிற்கும் இடையில் இடம்பெற்ற இறுதிச் சுற்றின் போது மாவட்ட செயலக அணியினர் 26 ஓட்டங்களினால் வெற்றிக்கிண்ணத்தினை சுவீகரித்துள்ளனர்.

அரச திணைக்களங்களுக்கிடையிலான 10 ஓவர்களை கொண்ட கிரிக்கட் சுற்றுப் போட்டியில் மாவட்ட செயலக அணி, 14 பிரதேச செயலக அணியினர் மற்றும் வாழைச்சேனை பஸ் டிப்போ அணியினர் அடங்கலாக 16 அணிகள் இச்சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றியுள்ளதுடன், குறித்த சுற்றுப் போட்டியில் சிறந்த விளையாட்டு வீரராக மாவட்ட செயலக அணியைச் சேர்ந்த எம்.எம்.எம்.பாஹு முும், சிறந்த பந்து வீச்சாளராக மாவட்ட செயலக அணியைச் சேர்ந்த வை.ஜெயராஜ் மற்றும் தொடராட்ட நாயகனாக மாவட்ட செயலக அணியைச் சேர்ந்த துரைசிங்கம் ராஜ்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் வெற்றி பெற்ற அணியினரிற்கும் தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்குமான வெற்றிக் கிண்ணங்களையும் பரிசில்களையும் கோறளைப்பற்று பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. நிருபா பிரிந்தன் வழங்கிவைத்துள்ளார்.







வெகுவிரைவில்
கோலாகலமாக
திறக்கப்பட உள்ள
Asiatischer Lebensmittelladen
IMPORTAS
200+பார்க்கிங் வசதியுடன்
HIGHWAY யிலிருந்து 700M தூரம் மட்டுமே!
சுவைமிகுந்த தாயக உணவுகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Parkweg 2
4665 Oftringen
Tel : 062 798 11 11
www.importasoftringen.ch
Kings
TRS
Niru
Aachi
LEELA
Maggi
Suryaa
LION
PG tips
Maliban
Rubicon
Double Horse
ELAKKIA
Tilda
OKF


IMPORTAS
International Foods & Beverages
www.importas.ch
info@importas.ch
சுவைமிகுந்த தாயக உணவுகளை
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56
Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44
மொத்த விற்பனை நிலையம்
Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch
Kings
TRS
Niru
Aachi
LEELA
Maggi
Suryaa
LION
PG tips
Maliban
Rubicon
Double Horse
ELAKKIA
Tilda
OKF
Subash
RED LENTILS
ROTE LINSEN
Basmati Rice
CURRY POWDER

# ஒரு ஆசிரியரின் தவறுக்கு ஒட்டுமொத்த ஆசிரியர்களையும் வீதியில் நிற்க வைப்பது கவலைக்குரிய விடயம்: அரச பாடசாலைக்கு பூட்டு போடும் அதிகாரம் யார் வழங்கியது

## இலங்கை அரச ஆசிரியர் சங்கம்

(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

மட்டக்களப்பில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கடந்த சில தினங்களுக்கு முன்னதாக நடைபெற்ற அசம்பாவிதம் தொடர்பாக தாம் அதிர்ப்தி அடைவதாக இலங்கை அரச ஆசிரியர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

நேற்று (07) இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பொன்று திருகோணமலை ஊடக இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது குறித்த சங்கத்தின் வடக்கு கிழக்கு மாகாண செயலாளர் ஜீவராஜா ருபேசன் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் சிலர் குறித்த பாடசாலையில் பணியாற்றும் ஆசிரயர் ஒருவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது குறித்த ஆசிரியருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அவருக்கு எதிராக விசாரணை முன்னெடுக்கப்பட்டு அந்த விசாரணையின்போது அவருடைய குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவர் பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட




வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

ஒரு ஆசிரியரால் இளைக்கப்பட்ட தவறை சுட்டிக்காட்டி ஒட்டுமொத்த ஆசிரியர் சமுதாயத்தை ஒரு சிலர் அரசியல் நோக்கத்திடற்க்காக குறித்த பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களையும் அன்றைய தினத்தில் வீதியில் நிறுத்தி வைத்திருந்தார்கள் அதனை தாம் வன்மையாக கண்டிப்பதாக இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் வடக்கு கிழக்கு மாகாண செயலாளர் ஜீவராஜா ருபேசன் தெரிவித்தார்.

மேலும் குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது ஆசிரியர்கள் சிலர் தாக்கப்பட்டதாகவும் அதில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இன்று வரை சிகிச்சை பெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டிய இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் வடக்கு கிழக்கு மாகாண செயலாளர் ஜீவராஜா ருபேசன் குறித்த ஒரு ஆசிரியருக்காக பாடசாலையின் பிரதான நுழைவாயிலை பிறிதொரு பூட்டினை கொண்டு பூட்டி அங்கு உற்செல்ல எவரையும் அனுமதிக்காது தடுத்தமை முற்றிலும் சட்டவிரோதமான ஒரு செயலாகும் என சுட்டிக்காட்டிய இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் வடக்கு கிழக்கு மாகாண செயலாளர் கடந்த 24 வருட காலமாக தீர்த்து வைக்கப்படாமல் இருக்கின்ற சம்பள முரண்பாடு பிரச்சினை நிலவி வருகின்ற இக்காலப்பகுதியில் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றது மிகவும் வருத்தத்திற்குரியது விடயம் என்றும் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருதிக்கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் வலியுறுத்திய இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் வடக்கு கிழக்கு மாகாண செயலாளர் ஜீவராஜா ருபேசன் அவ்வாறு குறித்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தாம் மாபெரும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தயார் நிலையில் உள்ளதாகவும் லங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் வடக்கு கிழக்கு மாகாண செயலாளர் ஜீவராஜா ருபேசன் வேண்டுகோள் விடுக்கிறார்.

இவ்வாறு ஆசிரியர் சமூகத்தினை ஒரு அடிமைப்படுத்துகின்ற ஒரு சமுதாயமாக நடந்துகொள்வதாக சந்தேகம் ஏற்ப்படுவதாக கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது .

# காரைதீவு பிரதேசசபை தொடர்ந்து த.தே.கூட்டமைப்பு வசமிருக்கவேண்டுமானால் ஸ்ரீல.மு.காங்கிரஸ் ஆட்சிக்கு ஆதரித்து வாக்களிக்க தயாராகவுள்ளோம்!

## கல்முனை மாநகர சபையின் த.தே.கூ. அதிசிரேஸ்ட உறுப்பினர் லயன்.விஜயரேத்தினம் சவால்

( வி.ரி.சகாதேவராஜா)

பாரம்பரியமிக்க காரைதீவு பிரதேசசபையானது தொடர்ந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வசமிருக்க வேண்டுமானால், நாம் ஸ்ரீல.மு.காங்கிரஸ் ஆட்சிக்கு குறிப்பாக மேயரின் பட்ஜட்டுக்கு ஆதரித்து வாக்களிக்க தயாராகவுள்ளோம். இதில் மாறுபட்டகருத்துக்கிடமில்லை. மு.கா. த.தே. கூட்டமைப்பு உறவென்பது காலத்தின் கட்டாயதேவை.அதனையே எமது தலைமைகளும் அறிவுறுத்தியிருக்கின்றன.அதற்காக எமது உயிருள்ளவரை அதனைக்கட்டிக் காப்போம்.

இவ்வாறு கல்முனைமாநகரசபையில் அதிகூடிய மூன்று தடவைகள் உறுப்பினராக தெரிவாகிய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்அதிசிரேஸ்டஉறுப்பினர் லயன் அழகக்கோன் விஜயரெத்தினம் அறைகூவல் விடுத்தார்.

கல்முனை மாநகரசபை மற்றும் காரைதீவு பிரதேசசபையின் எதிர் வரும் பட்ஜெட் வாக்கெடுப்பு தொடர்பாக கேட்டபோது அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

வரலாற்றில் நாம் பல பாடங்களை கற்றறிந்திருக்கிறோம். அந்த அனுபவங்களை கற்றறிந்த பாடமாக



க்கொண்டு எதிர்காலத்தை வெற்றிகரமாக எதிர்நோக்கவேண்டும். விட்டுக்கொடுத்தவன் கெட்டுப்போனதில்லை . கெட்டுப்போனவன் விட்டுக்கொடுத்ததில்லை.

பல்லினசமுகம் வாழ்கின்ற எமது அம்பாறை பிராந்தியத்தில் உள்ள உள்ளூராட்சிசபைகளில் ஆட்சிபீடத்தில் ஏதோஒருவகையில் ஒரு தமிழரோ அல்லது ஒரு முஸ்லிமோ தலைவராகவிருப்பார். அவருக்கு எமது அங்கீகாரத்தை வழங்குவதனூடாக மக்களின்வரிப்பணத்தை முறைப்படி பயன்படுத்த சந்தர்ப்பமளிக்கப்படுகின்றது. அங்கிகாரத்தை வழங்காமல் நாம் அவரிடம் எவ்வித அபிவிருத்தியையோ ஆதரவையோ எதிர்பார்க்கமுடியாது.

அந்தவகையில் காரைதீவு பிரதேசசபை த.தே.கூட்டமைப்பு வசமுள்ளதை அறிவோம்..அதற்கு மு.காங்கிரஸ் ஆதரவளித்து வந்துள்ளதை அறிவோம். அதுபோல் நாமும் கடந்த தடவையும் கல்முனையில் மாநகரமேயருக்கு ஆதரவளித்தோம்.சிலபல வேலைகளைச்செய்தோம். ஆரம்பத்தில் முரண்பட்டு சாதித்ததொன்றுமில்லை.

கல்முனைமாநகரசபையில் த.தே. கூட்டமைப்பைப்பொறுத்தவரை அதிசிரேஸ்ட உறுப்பினர் நான். எமது தலைமைப்பீடம் என்னிடம் இம்முறையும் மு.காவை ஆதரிக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது. கட்சிக்கும் தலைமைக்கும் கட்டுப்பட்டவர்கள் நாம். அதைவிட எமக்கொரு தார்மீகபொறுப்புமுண்டு.

நாம் இங்கு கல்முனையில் மு.கா. மேயரை ஆதரித்தால் அங்கு காரைதீவில் த.தே.கூட்டமைப்பு ஆட்சிக்கு மு.கா ஆதரவளிக்கும். இதில் எவ்வித ஒளிவுமறைவுமில்லை. ரகசியமுமில்லை. ஒத்தால் வாழலாம் எத்தால் வாழமுடியாது.. எனவே எமது எதிர்காலத்தை தீர்கக்தரிசனத்தோடு எதிர்கொள்ள இருசாராரும் பரஸ்பரம் புரிந்துணர்வோடு சகோதரமாக பழகிக்கொள்ளவேண்டும் அத்துடன் ஆதரவளிக்கவேண்டும். என்றார்.

# கல்முனையில் கட்டாக்காலிகளால் தோல்லை : களத்தில் இறங்கி கட்டுப்படுத்துவதில் தயக்கம் காட்டுகிறது கல்முனை மாநகர சபை !







(நூருள் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபை பிரதேசங்களில் காட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் வாகனப் போக்குவரத்து நெரிசல் நிரம்பிய அவசர நேரங்களில் மட்டுமின்றி இரவு வேளைகளிலும் உள்ளதன் காரணமாக பாதசாரிகள் மற்றும் வாகன சாரதிகளுக்கு இடைஞ்சல் ஏற்பட்டு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருவதுடன் விபத்து சம்பவங்களும் இடம்பெறும் அபாயம் நிலவிவருகிறது. இது தொடர்பில் கல்முனை மாநகர சபை முதல்வர், ஆணையாளர், உறுப்பினர்கள் கவனம் செலுத்தி இப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத்தருமாறு பொது மக்கள் கேட்டுக் கொண்டதை அடுத்து கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றக்கீபினால் பொதுமக்களுக்கு அறிவித்தல் ஒன்றும் விடுக்கப்பட்டது.

கடந்த 2021 அக்டோபர் 06ஆம் திகதி வெளியிடப்பட்ட அந்த அறிவித்தலில் கல்முனை மாநகர சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லைகள் அதிகரித்திருப்பதால், அவற்றைக் கைப்பற்றி, உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிட நடவடிக்கை எடுக்கபட்டிருக்கிறது. 0%102021 தொடக்கம் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இவ்வாறு கைப்பற்றப்படும் ஒவ்வொரு ஆடு அல்லது மாட்டுக்கும் நாள் ஒன்றுக்கு 5000 ரூபா வீதம் தண்டப்பணம் அறவிடப்படவுள்ளது.


கல்முனை மாநகர பிரதேசங்களில், குறிப்பாக பிரதான வீதிகள், சந்தைகள், பஸார்கள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலிகளின் தொல்லைகள் மீண்டும் அதிகரித்திருப்பதாகவும் இதனால் வாகன விபத்துகள் இடம் பெறுவதுடன் பயணிகளும் வர்த்தகர்களும் நுகர்வோரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் மாநகர சபைக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன. இது சம்மந்தம்மாக பல தடவைகள் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டும், கட்டாக்காலிகளின் உரிமையாளர்கள் பொறுப்புடன் நடந்து கொள்வதாகத் தெரியவில்லை.

இவற்றைக் கவனத்தில் கொண்டு, மேற்படி நடவடிக்கையை முன்னெடுக்குமாறு மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் அவர்கள், சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆகையினால், குறித்த கட்டாக்காலி ஆடு, மாடுகளின் உரிமையாளர்கள், அவற்றை மிகவும் பொறுப்புடன் தமது இடங்களில் வைத்துப் பராமரிக்குமாறும் இல்லையேல், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குறித்த கட்டாக்காலிகள் கைப்பற்றப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடமிருந்து மேற்கூறப்பட்ட பிரகாரம் தண்டப் பணம் அறவிடப்படும் என கல்முனை மாநகர சபை எச்சரிக்கை விடுக்கின்றது. முன்னரும் பல தடவைகள் கட்டாக்காலிகள் பல கைப்பற்றப்பட்டு, தண்டப்பணம் அறவிடும் நடவடிக்கையை கல்முனை மாநகர சபை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது என்று தெரிவித்திருந்தனர்.

ஆனாலும் இன்றுவரை அந்த செயட்பாடு அமுலில் இல்லாது வெறுமனே உள்ளதுடன் கட்டாக்காலி மாடுகள் வீதியில் அலைந்துதிரிகின்றமையினால் வாகன போக்குவரத்து நெரிசல் நிரம்பிய கல்முனை மாநகரில் பல்வேறு அசௌகரியங்களை பாதசாரிகளும், வாகன சாரதிகளும் எதிர்நோக்கி வருகின்றனர். இதனை அவசரமாக கவனத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை மாநகர சபை நிர்வாகத்தை மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# 'ஈழத்து நூன்' எம்.ஏ.எம்.நிலாம் எழுதிய தட்டு தாவாரம் கவிதை நூல் அறிமுக விழா இன்று கொழும்பில்




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பவள விழா நாயகன் பத்திரிகையாளர், எழுத்தாளர், கவிஞர், 'ஈழத்து நூன்' எம்.ஏ.எம்.நிலாம் எழுதிய 'தட்டு தாவாரம்' கவிதை நூல் அறிமுக விழா இன்று புதன் கிழமை (08) பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு 2, முஸ்லிம் காங்கிரஸ் தலைமையக தாருஸ்ஸலாம் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உப தலைவி கலாபூஷணம் புர்கான் பீ. இப்திகார் (எம்.ஏ.) தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், பிரதம அதிதியாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் ''முனீருள் மில்லத்'' பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன் கலந்து கொள்வதோடு, நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மல்லியப்பூ சந்தி திலகர், கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எம்.ரி.எம்.ஆஸிம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

நூலின் முதல் பிரதியை தொழிலதிபர் முஸ்லிம் சலாஹுதீன் பெற்றுக் கொள்வதோடு, டாக்டர் மௌலவி ஜலீல் சுல்தான் (மன்பஈ) திருச்சி மாவட்ட அரசு டவுன், டாக்டர் வி.எஸ்.ஏ. ஷேக் முகமது சுஹைல் (தலைவர், செயலாளர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி திருச்சி), திருச்சி டாக்டர் எம்.கே.



ஷாஹுல்ஹமீது (ஊடகவியலாளர் மணிச்சுடர், மக்கள்குரல்) எழுத்தாளர்களான கே.ஜே.உமர்கயான், பழனி சஹான் ஆகியோர் அழைப்பதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் கல்விமான்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான
காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto
Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# மன்னார் நுழைவாயிலில் நிலை கொண்டுள்ள இராணுவ சோதனை சாவடி நீக்கப்பட வேண்டும்

## வன்னி எம்.பி.சாள்ஸ் நிர்மலநாதன்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் நாளாந்தம் பிரயாணிகளால் பேசப்பட்டுவரும் மன்னார் தீவின் நுழைவாயில் இராணுவ சோதனையில் பிரயாணிகள் எதிர்நோக்கி வரும் அசௌரியங்களுக்கு விடிவு பிறக்குமா என்ற கேள்விக்குறியுடன் உள்ளூர் மற்றும் வெளியூர் பிரயாணிகள் தங்கள் பிரயாணங்களை மேற்கொண்டு வரும் நிலையில் இது விடயமாக பலரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு வருகின்றது.

இத தொடர்பாக மன்னார் பிரடிஐகள் குழுவுக்கும் கொண்டு செல்லப்பட்டபோதும் இவ் குழுவானது அண்மையில் தள்ளாடி இராணுவ அதிகாரியையும் மன்னார் அரசாங்க அதிபரையும் நேரடியாகச் சந்தித்து இது விடயமாக கலந்துரையாடப்பட்டது. அத்துடன் இவ் விடயம் தொடர்பாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (03.12.2021) சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பாதுகாப்பு செயலாளரை சுட்டிக்காட்டி தனது உரையில்

மன்னார் மாவட்டத்தில் உள்ள நுழைவாயில் சோதனை சாவடியினால் மன்னார் தீவுக்குள் உள்வருபவர்கள் வெளிச் செல்லுபவர்கள் பெரிதொரு இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

குறிப்பாக அரச சேவையாளர் முதல் சாதாரண பயணிகள் வரை இவ் சோதனை சாவடியால் பெரும் அசௌரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

அந்த இடத்தில் பெரியதொரு இடத்தை பிடித்துக் கொண்டு பிரயாணிகளை ஏற்றி இறக்கப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்திலிருந்து சேகரிக்கப்படும் மீன்களை தென் பகுதிக்கு கொண்டு செல்லுகின்ற வாகனங்களிலிருந்து இவ் மீன்கள் இவ்விடத்தில் முழுமையாக இறக்கப்பட்டு சோதனை செய்யப்படுகின்றது.

இவ்வாறு தேங்காய்கள் எல்லாம் முழுமையாக இறக்கப்படுகின்றது. இது தொடர்பாக நாம் இராணுவ அதிகாரிகளிடம் விசாரித்தால் போதைவஸ்து கடத்தலை காரணம் காட்டுகின்றனர்.



மன்னாரை சுற்றி முழுமையாக கடல் காணப்படுகின்றது. இவ்வாறு இருக்க கடற்படையினருக்கு தெரியாமல் எவ்வாறு மன்னாருக்கு போதைவஸ்துக்கள் இங்கு கொண்டுவர முடியும் என்பதை நான் இந்த இடத்தில் கேட்டு நிற்கின்றேன். அத்துடன் இந்த சோதனை சாவடியில் மக்கள் தான் அவதிபடுகின்றார்கள். ஆனால் போதைவஸ்து வியாபாரிகள் தங்கள் தொழிலை செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். கொழும்பில் அதிகமான போதைவஸ்துக்கள் அகப்படுகின்றன. ஆனால் அங்கு எந்த இடங்களிலும் சோதனை சாவடி அமைத்து அப்பகுதி மக்களை கஷ்டப்படுத்தவில்லை.

ஆகவே பாதுகாப்பு செயலாளருக்கு முடியும் என நினைக்கின்றேன் போதைவஸ்துக்களை பிடிப்பதற்கு. இதற்கென தனியான புலனாய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி வட பகுதியிலுள்ள போதைவஸ்து வியாபாரிகள் மற்றும் பாவனையாளர்களை கட்டுப்படுத்த முடியும்.

இதைவிடுத்து மக்களை துன்புறுத்துவது எமக்கு இது மன வேதனையை தருகின்றது. இந்த சோதனை சாவடி தொடர்பாக பாமர மக்கள் தொடக்கம் அரச சேவையாளர்கள் வரை எனக்கு தொடர்ச்சியான அழுத்தங்களைதந்து கொண்டிருக்கின்றார்கள்.

இது விடயமாக நான் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளேன். இருந்தும் பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பாக இன்று பேசப்படும் இந்த நேரத்திலும் நான் சுட்டிக்காட்டுகின்றேன். இதற்கு பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் இங்கிருந்து அங்குள்ள அதிகாரிகளிடம் அறிக்கை கேட்பீர்கள். அவர்களும் அங்கிருந்து இந்த போதைவஸ்து தொடர்பான காரணத்தையே சுட்டிக்காட்டுவார்கள்.

ஆனால் நீங்கள் அங்குள்ள இராணுவ அதிகாரிகளுக்கு தெரியாமல் இங்கிருந்து ஒரு புலனாய்வு பிரிவை அனுப்பி மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளை முழுமையாக அறிய வேண்டும். நாங்கள் போதை வஸ்துக்களுக்கு எதிரானவர்கள். இதை முழுமையாக கட்டுப்படுத்த வேண்டும் என அவா கொண்டவர்கள். ஆகவே இதை தொழில் நுட்ப ரீதியான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என வேண்டி நிற்கின்றேன். பாதுகாப்பு அமைச்சின் கூட்டம் ஒன்றில் நான் இந்த போதைவஸ்து தொடர்பான ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு தெரிவித்திருந்தேன். ஆனால் அவர் தொடர்ச்சியாக அரச ஆதரவோடு இவ் தொழிலை செய்து கொண்டே இருக்கின்றார்.

ஆகவே நான் இங்கு வேண்டி நிற்பது மன்னாரில் நுழைவாயிலுள்ள சோதனை சாவடியில் மக்களை கஷ்டப்படுத்தாது பிரயாணிகள் பயணம் செய்ய வழி சமைக்கப்பட வேண்டும்.

தள்ளாடி முகாமுக்கு அருகாமையிலுள்ள அந்தோனியார் ஆலயத்துக்கு கூட பக்தர்கள் செல்லுவதில் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர். ஆகவே மன்னார் நுழைவாயில் சோதனை சாவடியை நீக்க வேண்டும் என வேண்டி நிற்கின்றேன் என இவ்வாறு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வேண்டிக் கொண்டார்.

# லிந்துலை நகர சபையின் ௨0௨௨ ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தோல்வி

(க.கிஷாந்தன்)

வரவு செலவுத் திட்டத்திற்கு ஆளும் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தமையால் வரவு செலவுத் திட்டம் தோல்வியடைந்துள்ளது.

அந்த நகர சபையின் தலைவர் லச்சுமன் பாரதிதாசனினால், 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டது.

14 ஆயிரம் கோடியே 43 இலட்சத்து இருபத்து ஆயிரத்து 60 ரூபா மதிப்பிலான 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு நகர சபையில் நேற்று செவ்வாய்க்கிழமை சமர்பிக்கப்பட்டது.

இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் சந்தன குணதிலக மற்றும் பிரசன்ன விதானகே ஆகியோர் வாக்களித்தனர்.

இதனால் வரவு செலவுத் திட்டம் 5 க்கு 4 என்ற பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

தலவாக்கலை - லிந்துலை நகர சபையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மூன்று உறுப்பினர்களும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மூன்று உறுப்பினர்களும், சுயேட்சை குழுக்கள் சார்பில் இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் உள்ளனர்.

இவர்களில் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் சுயேட்சை குழு உறுப்பினர் நேற்று சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

அதேபோல் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினவை பிரதிநிதித்துவப்படுத்திய மயில்வாகனம் பரமானந்தனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் கட்சியரில் இருந்து நீக்கப்பட்டார்.

இந்த நிலையில் தனக்கு பதிலாக அசங்க சம்பத் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக மயில்வாகனம் பரமானந்தன் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தை நாடி இடைகால தடை உத்தரவை நேற்று பெற்றுக்கொண்டார். இந்த தடை உத்தரவு குறித்த அறிவிப்பு நீதிமன்றத்தால் சபைக்கு



அறிவிக்கப்பட்டது.

இதனால் உறுப்பினராகும் சந்தர்ப்பத்தை அசங்க சம்பத் பீரிசுக்கு நகர சபை தலைவர் வழங்கவில்லை.

இதனால் சபையில் அமைதியின்மை ஏற்பட்ட நிலையில் அசங்க சம்பத் பீரிஸ் பொலிஸாரால் சபையில் இருந்து அகற்றப்பட்டார்.

இவ்வாறு தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்; திட்டம் தோல்வியடைந்ததால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# புலிபாய்ந்த கல் பிரதான வீதியை புணரமைத்து தருமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டம்

(க.ருத்திரன்)

மட்டக்களப்பு கிரன் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புலிபாய்ந்த கல் பிரதான வீதியானது மண் ஏற்றும் கனரக வாகனத்தின் போக்கு வரத்து காரணமாக வீதி சேதமடைந்து போக்குவரத்திற்கு உகந்தாத நிலையில் காணப்படுவதாக தெரிவித்து பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து குறித்த வீதியினை புணர்த்தாரணம் செய்து தருமாறு கோரி வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு எதிராக திங்கட்கிழமை (6.12.2021) கவனயீடப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த பல காலங்களாக இவ் வீதியானது நீர்பாசன திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் இருந்ததாகவும் தற்போது வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் ஆனால் வீதியானது இதுவரைகாலமும் புணர்தாரனம் செய்யப்படமால் உள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் வீதியின் வழியாகவே மக்கள் தங்களது அன்றாட இயல்பான விடயங்களை மேற்கொண்டு வருவதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதாரத்தின் பல்வேறு பட்டகாரணிகளின் அடிப்படையில் முக்கியத்துவம் வகிக்கும் பிரதான வீதியாக இவ் புலிபாய்ந்த கல் வீதி உள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே இவ் விடயத்தில் மாவட்டத்தினை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல்வாதிகள் மற்றும் நிர்வாகிகள் அக்கறை செலுத்தி இவ் வீதி மற்றும் பாலத்தினை புணர்தாருணம் செய்து தருமாறு கேட்கின்றனர்.

இதே வேளை இவ் விடயம் தொடர்பாக தங்களது கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் கோரிக்கையினை கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு தெரிவித்திருந்தார்.வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதம பொறியிலாளர் குறித்த இடத்திற்கு வருகை தந்து நிலமைகளை ஆராயாவுள்ளதாகவும் கணராக வாகனத்தின் அனுமதியினை தடை செய்ய வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் அனுமதியினை நாடுமாறு பிரதேச செயலாளர் ஆலோசனையும் வழங்கினார்.

# பிறந்தவுடன் அடையாள அட்டை இலக்கம்

பிறப்பு சான்றிதழ் வெளியிடும் போது புதிய திருத்தங்கள் மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய இலங்கை அடையாள இலக்கத்தையும் பிறப்பு சான்றிதழில் இணைக்கப்படவுள்ளது. பாதுகப்பு அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதற்காக யோசனையை அமைச்சரவையில் முன்வைக்கவுள்ளார்.

ஒரே அடையாள இலக்கத்தை பயன்படுத்துவதன் மூலம் பிறப்பில் இருந்து இறப்பு வரை முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளிலும் அரச மற்றும் தனியார் பிரிவிலும் சேவை பெற்றுக் கொள்ளும் போது அந்த நடவடிக்கை இலகுவாகவும் விரைவாகவும் மேற்கொள்வதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படும் என அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய ஆட்பதிவு திணைக்களத்தின் தகவல் கட்டமைப்பு ஊடாக பதவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பின்னர் அந்த இலக்கத்தை உள்ளடக்கி பதிவாளர் நாயக திணைக்களதத்தினால் எதிர்வரும் நாட்களில் பிறப்பு சான்றிதழ் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

AGROMATES
2020

# Remembering



18th December 2021
Saturday

# Professor S. Raveendranath

Please join us as we honor Prof. Raveendranath on the **FIFTEENTH** anniversary of his passing.

**Toronto/Washington: 6.30 am**
**UK: 11.30 am**
**Netherlands/Norway: 12.30 pm**
**Nairobi: 2.30 pm**
**Sri Lanka: 5.00 pm**
**Sydney/Melbourne: 10.30 pm**
**New Zealand: 12.30 am Sun**

**Zoom Meeting ID**
**824 7236 6202**

Your presence will be very valuable and highly anticipated!


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Restaurant
GRÜNAU
Meier-Wiesen Str. 58
8064 Zürich
Montag - Sonntag
08:00 - 22:00
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
Uber Eats
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
TWINT

# மன்னாரில் திங்கள் கிழமை 15 பேர் கொரோனா தொற்றாளர்களாக பதிவாகியுள்ளது

( வாஸ் கூஞ்ஞ)

திங்கள் கிழமை மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் 15 பேர் உறுதி செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மன்னாரில் மார்கழி மாதம் இதன் தொகை %2 ஆக உயர்ந்துள்ளதாக மன்னார் பிராந்திய சேவைகள் பணிப்பாளரின் நாளாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பகுதியில் திங்கள் கிழமை கொரோனா தொற்றாளர்கள் 15 பேர் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனையில் உறுதிசெய்யப்பட்ட இவ் கொரோனா தொற்றாளர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் 9 நபர்களும், பெரிய பண்டிவிரிச்சான் வைத்திசாலையில் 2 பேரும், நானாட்டான். சுணீலாவத்துறை, பேசாலை மற்றும் முருங்கன் வைத்தியசாலைகளில் தலா ஒருவருமே இவ் நோயாளர்களாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் (டிசம்பர்) இதுவரை 72 நபர்கள் கொரோனா தொற்றுக்கு ஆளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் தொகை 3005 ஆக உயர்ந்துள்ளது. கொரோனாவால் மரணித்தவர்களின் தொகை 29 ஆகவும் காணப்படுகின்றது.

இதுவரைக்கும் மன்னாரில் முதலாவது தடுப்பூசி 81099 பேருக்கும், இரண்டாவது தடுப்பூசி 75033 பேருக்கும், பூஸ்டர் தடுப்பூசி 3075 நபர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கு 5652 பேருக்கும் மற்றும் பாடசாலையிலிருந்து இடை விலகல் குறிப்பிட்ட வயதுடையவர்களுக்கு 1188 பேருக்கும் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் நாளாந்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் சிரேஷ்ட பிரஜைகளுக்கு வீட்டில் தடுப்பூசி வழங்கப்படும்

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் சிரேஷ்ட பிரஜைகளுக்கு மேலதிக வலுவூட்டல் (பூஸ்டர்) தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதாவது அறுபது வயதுக்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு இவ் தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது.

இவர்கள் தடுப்பூசி வழங்கும் நிலையமொன்றுக்கு விஜயம் செய்து இவ் மேலதிக வலுவூட்டல் (பூஸ்டர்) தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியாவிட்டால் திங்கள் கிழமை ) மற்றும் செவ்வாய்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை 0232222916 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வீட்டில் இவ் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள பதிவு செய்ய முடியும் என மன்னார் சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது

# டயகம ஆக்ரோயா ஆற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு




(க.கிஷாந்தன்)

டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டயகம ஆக்ரோயா ஆற்றிலிருந்து பெண்ணின் சடலம் திங்கள் கிழமை மாலை மீட்கப்பட்டதாக டயகம பொலிஸார் தெரிவத்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட பெண் டயகம 5ம் பிரிவை சேர்ந்த 53 வயதுடைய சாமிநாதன் தங்கேஸ்வரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த ஆற்றில் பெண் ஒருவரின் சடலம் மிதப்பதைக் கண்ட பிரதேச மக்கள் உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவ ஸ்தலத்திற்கு விரைந்த டயகம பொலிஸார் சடலத்தை பார்வையிட்ட பின் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பெண் நீரில் அடித்துக் கொண்டு வந்து உயிரழந்தாரா அல்லது ஆற்றில் தவறி விழுந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து ஆற்றில் எரிந்து சென்றார்களா என்பது தொடர்பாக பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை டயகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கப்பம் கோரி கைதாகிய போலி சி.ஐ.டி நபருக்கு விளக்கமறியல்

பாறுக் ஷிஹான்

திருட்டு விசாரணை ஒன்றினை சமாளிப்பதற்கு கப்பம் கோரி கைதாகிய போலி சி.ஐ.டி ஒருவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லடி உப்போடை புறநகர் பகுதி ஒன்றில் அண்மையில் நகை திருட்டு சம்பவம் ஒன்று இடம் பெற்றிருந்தது. இதன் பிரகாரம் குறித்த திருட்டு தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை அடையாளம் கண்ட காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை(5) இது குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக குறித்த சந்தேக நபரின் வீட்டுக்கு சென்று விசாரித்துள்ளனர்.

பின்னர் சந்தேக நபர் வீட்டில் இல்லாமையினால் மீண்டும் வருவதாக கூறி அவ்விடத்தில் இருந்து சென்றுள்ள நிலையில் அதே வீட்டிற்கு சில நிமிடத்திற்கு மற்றுமொரு போலி சி.ஐ.டி என கூறப்படும் நபர் ஒருவர் சென்றுள்ளதுடன் ரூபா 10 ஆயிரம் கப்பமாக தந்தால் குறித்த பிரச்சினையை தீர்த்து தருவதாக சந்தேக நபரின் பெற்றோர் களிடம் தெரிவித்துள்ளார்.

கப்பம் கோரிய போலி சி.ஐ.டி தொடர்பாக தொடர்பில் விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய அன்று இரவு காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையில் சென்ற பொலிஸார் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.




சந்தேக நபர் வைத்திருந்த அடையாள அட்டையில் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கல்விப்பணிப்பாளர் என பதவி குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்திருந்த நிலையில் திங்கட்கிழமை(6) மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேக நபரை ஆஜர்படுத்தியதை தொடர்ந்து எதிர்வரும் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# வாசிப்பை மேம்படுத்தும் 'சுட்டிஸ் உலகம்' நூல் இலவசமாக வழங்கிவைப்பு!

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

தமிழா ஊடக வலையமைப்பு மற்றும் வித்யாசாகர் கலை மன்றம் ஆகியன இணைந்து வாசிப்பை மேம்படுத்தும் 'சுட்டிஸ் உலகம்' எனும் நூலை இலவசமாக வழங்கிவைத்தன.

இந்தியாவின் பன்முக ஆளுமை இசையமைப்பாளர் வித்யாசாகரின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழா ஊடக வலையமைப்பு மற்றும் வித்யாசாகர் கலை மன்றம் ஆகியன இணைந்து நாவிதன்வெளி கோட்டப் பாடசாலைகளில் தரம் 3 இல் கல்வி கற்கும் 300க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான வாசிப்பை மேம்படுத்தும் 'சுட்டிஸ் உலகம்' எனும் நூல் இலவசமாக கணேஷா





வித்தியலயத்தில் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழா ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் எஸ் எம் ஜெலீஸ், மற்றும் அதன் ஆலோசகர் சந்தக்கவி எம் ஐ அச்சி முகம்மது ,நாவிதன்வெளி கோட்டக் கல்வி அலுவலக இணைப்பாளர் சி.பிரகதீஸ்வரன் , குறித்த பாடசாலை அதிபர்கள் , ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# கிழக்கு மாகாண பிரதம செயலாளராக டி.எம்.எல்.பண்டாரநாயக்க



(அ .அச்சுதன்)

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட டி.எம்.எல்.பண்டாரநாயக்க தமது கடமைகளை ஸீதிருகோணமலையில் அமைந்ததுள்ள கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் சமயத் தலைவர்களின் ஆசீர்வாதத்தின் பின்னர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தார்.

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஸ்ட்ட அதிகாரியான இவர் இதற்கு முன்னர் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாடிகோராள, திணைக்கள தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# மகளை பாலியல் துஸ்பிரயோகம் செய்து தப்பி செல்ல முயன்ற தந்தை கைது

பாறுக் ஷிஹான்

தனது மகளான சிறுமியை பாலியல் துஸ்பிரயோகம் செய்து தப்பி செல்ல முயன்றவரை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி காத்தான்குடி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு செவ்வாய்க்கிழமை காலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக இடமாற்றப்பட்டுள்ளார்.

மேற்குறித்த சம்பவமானது மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலமுனை பகுதியில் திங்கட்கிழமை(6) மாலை இடம்பெற்றுள்ளது.

இதன் போது சுமார் 13 வயது மதிக்கத்தக்க மகளை பாலியல் துஸ்பிரயோகம் செய்த தந்தை இரவு கொழும்பிற்கு தப்பி செல்வதற்காக காத்தான்குடி பஸ் தரப்பிடத்தில் மறைந்திருந்த போது காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையில் சென்ற பொலிஸார் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதானவர் 36 வயதுடையவர் என்பதுடன் இவரது மனைவி மத்தியகிழக்கு நாடொன்றில் பணியாற்றி வருகின்றமையும் பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

கைதாகிய சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# மட்டக்களப்பு மாவட்ட காணி திட்டமிடல் பயன்பாட்டுக் குழுக் கூட்டம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட காணி திட்டமிடல் பயன்பாட்டுக் குழுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

மாவட்ட காணி திட்டமிடல் பயன்பாட்டுக் குழுக்கூட்டமானது, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய கே.கருணாகரன் அவர்களது தலைமையில் இன்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது.

இதன் போது பிரதேச செயலக ரீதியாக முன்வைக்கப்பட்டிருந்த 120 விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், பிர



தேச செயலக ரீதியில் காணப்படுகின்ற அரச திணைக்களங்களுக்கான காணி ஆவணங்களை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் பரிசீலணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை பிரதேச மட்ட காணி பயன்பாட்டு குழு கூட்டங்களில் எடுக்கப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையில் இன்று மாவட்ட பயன்பாட்டு குழு முன்னிலையில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு சிபாரிசு வழங்கப்பட்டுள்ளது.



அதேபோன்று முதலீட்டாளர்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் குறுங்கால மற்றும் நீண்ட கால குத்தகைக்கு காணிகளை வழங்குவது தொடர்பாகவும், உள்ளூராட்சி மன்றங்களுக்கான சந்தை மற்றும் விளையாட்டு மைதானங்களுக்காக காணிகளை பாராதீனப்படுத்துதல் தொடர்பாகவும் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு காணி வழங்குதல் தொடர்பாகவும் இதன்போது பரிசீலனை செய்யப்பட்டுள்ளதுடன் பல திட்டங்களுக்கு சிபாரிசுகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக மாவட்ட செயலாளர் திருமதி. நவரூபரஞ்ஜனி முகுந்தன் அவர்களது ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில், காணிப்பயன்பாட்டு திட்டமிடல் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.எஸ்.கிறிசாந்தினி, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதேச செயலாளர்கள், காணி உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள், ஏனைய திணைக்களகங்களின் அரச அதிகாரிகள் உள்ளிட்ட முதலீட்டாளர்களும் இதன்போது கலந்துகொண்டுள்ளனர்.

# மஷூறா எழுதிய "நதிகளின் தேசியகீதம்" கவிதை நூல் வெளியீட்டுவிழா

**(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)**




நாடறிந்த கவிதாயினி சம்மாந்துறை மஷூறா எழுதிய ''நதிகளின் தேசியகீதம்'' எனும் கவிதைத்தொகுதி நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை மருதமுனையில் நடைபெறவிருக்கிறது.

மருதமுனை அல் ஹிக்மா ஜூனியர் பாடசாலையில் எழுத்தாளர் எ.எம்.நௌசாட் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நூல்வெளியீட்டுவிழாவிற்கு, பிரதமஅதிதியாக தென்கிழக்குப்பல்கலைக்கழக முதன்மைப்பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் கலந்துசிறப்பிப்பார்.

நயவுரையை பேராசிரியர் செ.யோகராசா நிகழ்த்த, நுண்பார்வையுரையை சத்தார் எம்.பிர்தௌஸ் நிகழ்த்துவார்.

தமிழா ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் எஸ் எம் ஜெலீஸ் நிகழ்வை ஏற்பாடுசெய்துள்ளார்.




# நுவரெலியாவில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான மூன்றாவது கோரோனா தடுப்பூசிகள் வழங்கள்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா மாநகரபை எல்லைக்குள் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான மூன்றாவது கொரோனா தொற்று தடுப்பூசிகள் செவ்வாய்கிழமை முதல் நுவரெலியா மாநகரபை சுகாதார பிரிவு காரியாலயத்தில் வழங்கப்படுவதாக நுவரெலியா மாநகரபை பொது சுகாதார அதிகாரி ஆர்.எம். பீ. எஸ். தெல்பிட்டிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நுவரெலியா மாநகரபை எல்லைக்குட்பட்ட 9 வட்டாரங்களில் வசிக்கும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு நேற்று முதல் கொரோனா தொற்று தடுப்பூசிகள் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்ககப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 4 வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு மாத்திரம் கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. இதனை தொடர்ந்து ஏனைய வட்டாரங்களில் உள்ளவர்களுக்கும் தடுப்பூசிகள் வழங்கப்படும். இம் மாநகரபை எல்லைக்குள் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கிய பின்னர் 20 வயதிற்க்கு மேற்பட்டவர்களுக்கும் கொரோனா தொற்று தடுப்பூசிகள் வழங்கும் வேலைத்திட்டம் ஆரப்பிக்கப்படும். என அவர் மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க நுவரெலியா பொது வைத்தியசாலையிலும் கடந்த வியாழக்கிழமை முதல் 60 வயதிற்க்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது கொரோனா தடுப்பூசிகள் தொடர்ந்து வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் எச்.ஐ.வி/எயிட்ஸ் தோடர்பான வலுவூட்டல் நிகழ்ச்சி

(பாறுக் ஷிஹான்)

கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் செவ்வாய்க்கிழமை தெரிவு செய்யப்பட்ட சுகாதாரப் பணியாளர்களுக்கு எச்.ஐ.வி/எயிட்ஸ் தொடர்பான வலுவூட்டல் நிகழ்ச்சி மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட்டது.

கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் ஏ.எல். எப். ரஹ்மான் தலைமையில் இடம்பெற்ற இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பிராந்திய





பாலியல் ஆரோக்கியம் மற்றும் பாலியல் நோய்கள் பிரிவின் பாலியல் நோய்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் டாக்டர் கே.ஏ.சி.ஆர். விஜேசேகர பல்வேறு விளக்கங்களை வழங்கினார்.

இதன்போது வைத்திய நிபுணர்கள், மருத்துவ அதிகாரிகள், தாதி உத்தியோகத்தர்கள், ஆய்வுகூட பரிசோதனையாளர்கள், மருத்துவ மாதுக்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பாலியல் தொற்று நோய்கள் பிரிவின் மருத்துவ அதிகாரி உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மழைவெள்ளத்தில் அள்ளுண்டுபோயுள்ள வீதி கவனிக்காமலிருக்கும் அதிகாரிகள்

(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட ஆனைகட்டிய வெளி நெடியவட்டை பிரதான வீதி அண்மையில் பெய்த பலத்த மழை வெள்ளத்தில் அள்ளுண்டு போயுள்ளதனால் அவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்

வருடாந்தம் மாரிமழைகாலத்தில் இவ்வீதி இவ்வாறு சேதடைவதுவும், அதனை அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து சிரமதானத்தின் மூலம் புணருத்தாரணம் செய்வதுமாகத்தான் இதுவரையில் இருந்து வருகின்றது. விவசாய வீதியாகக் காணப்படும் இவ்வீதியை இனி மேலும் சம்மந்தப்பட்டவர்கள் கவனிக்காமல் விடாது உடன் அதனைப் நிரந்தரமாகப் புணரமைப்புச் செய்துதர வேண்டும் என அவ்வீதியைப் பயன்படுத்தும் மக்களும், விவசாயிகளும், கோரிக்கை முன் வைக்கின்றனர்.



இவ் வீதியின் புணரமைப்பு தொடர்பில் போரதீவுப் பற்று பிரதேச சபையின் தவிசாளர் யோ.ரஜனியிடம் கேட்டபோது குறித்த வீதி வருடாந்தம் இவ்வாறு மாரிமழை காலத்தில் பழுதடைவது வழக்கமாகவுள்ளது. இந்த வீதி கமநல சேவைத் திணைக்களத்திற்குச் சொந்தமானது. இந்த வீதியை எமது பிரதேச சபைக்குக் கையளிக்குமாறு நாம் பலதடவை கோரிக்கை விடுத்துள்ளபோதிலும் அதனை அவர்கள் செய்யாமலுள்ளார்கள். இருந்தும் கடந்த வருடம் நாம் அவ்வீதியை ஓரளவு புணரமைப்பு செய்தோம். அது தற்போது மீண்டும் உடைப்பெடுத்துள்ளது என அவர் தெரிவித்தார்.

# அட்டன் ஓயாவிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு





(க.கிஷாந்தன்)

அட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டன் ஸ்டிதரன் தோட்டம் புருட்ஹில் பிரிவில் உள்ள மகாவலி கங்கைக்கு நீர்வழங்கும் கிளை ஆறான அட்டன் ஓயாவிலிருந்து செவ்வாய்க்கிழமை அன்று பெண்ணின் சடலம் ஒன்று காலை 09.00 மணியளவில் மீட்கப்பட்டதாக அட்டன் பொலிஸார் தெரிவத்தனர்.

சடலமொன்று மிதப்பதைக் கண்டு பிரதேசவாசிகள் அட்டன் பொலிஸருக்கு அறிவித்துள்ளனர். அதன்பின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட பெண் நீரில் அடித்துக் கொண்டு வந்து உயிரழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து ஆற்றில் எரிந்து சென்றார்களா என்பது தொடர்பாக பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம் இதுவரை யாருடையது என அடையாளம் காணப்படவில்லை. சுமார் 50ற்கும் 60ற்கும் இடையிலான வயது மதிக்கதக்க பெண் எனவும் மேலதிக விசாரணைகளை தொடர்வதாகவும் அட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# உதவி ஆசிரியர்களுடக்கு 15ம் திகதி நியமனம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வேண்டுக்கோளையடுத்து ஆசிரியர் உதவியாளராக சேவையாற்றி வந்த அனைவருக்கும் நியமனங்கள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட பாடசாலைகளில் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் 3000 உதவி ஆசிரியர் நியமனங்கள் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானால் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

குறித்த நியமனங்கள் அடிப்படை தகைமைகளை பூரத்தி செய்த பின்னர் நிரந்தரமாக்கப்படும் என நிபந்தினையின் அடிப்படையிலேயே குறித்த ஆசிரியர்கள் ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். எனினும் அவர்களின் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் கடந்த நல்லாட்சி அரசாங்கம் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. இந்நிலையில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதுகுறித்து நிதியமைச்சரிடம் பேசி மத்திய மாகாணத்தில் உள்ள 306 பேருக்கு எதிர்வரும் 15ம் திகதி நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அந்த வகையில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தேர்தல் காலத்தில் சகல உதவி ஆசிரியர்களுக்கும் நியமனங்களை பெற்றுக் கொடுக்க வலியுறுத்தியிருந்தார். அதனடிப்படையில் தொடர்ச்சியாக நியமனங்கள் வழங்கப்பட்டு வந்தன. இறுதியாக தற்போது எஞ்சியிருக்கின்ற 306 பேருக்கு நியமனங்களை வழங்குவதற்கு அவர் விடுத்த வேண்டுக்கோளையடுத்து மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே அவர்களின் வழிகாட்டலுக்கமைவாக எதிர்வரும் 15ம் திகதி நியமனங்கள் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் கனபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.



ஊடக சந்திப்பொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உதவி ஆசிரியர்கள் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக ஆராயிரம் மற்றும் பத்தாயிரம் ரூபா ஊதியத்தில் மிக கஷ்டமான நிலையிலே சேவையாற்றி வந்துள்ளனர். அந்த வகையில் அவர்களுடைய பிரச்சினைகளை காலத்திற்கு காலம் எடுத்துச் சென்று வலியுருத்தியமையினால் சிறிது சிறிதாக நியமனங்களை வழங்கப்பட்டிருந்தன.

மேலும், எஞ்சியுள்ள நியமனங்ளை வழங்குமாறு இராஜாங்க அமைச்சர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த நியமனங்கள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஒரு சில ஆசிரிய உதவியாளர்களின் கோவைகள் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் பயிற்சிகள் நிறைவு பெறாது பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக அவர்களுக்கான நியமனங்கள் பெற்றுக்கொடுக்கப்படாத போதிலும் அவர்களுக்கும் கோவைகள் முழுமையான பின் நிரந்தர நியமனங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# நுவரேலியா போது வைத்தியசாலையில் அடையாள பணி பகிஷ்கரிப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஒன்றிணைக்கப்பட்ட சுகாதார சேவை சங்கத்தின் செயலாளர் டெம்பிடிய சுகதானந்த ஹிமியை விடுதலை செய்ய கோரியும் சுகாதார சேவையாளர்களின் ஏனைய பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு பெற்றுதரும்படியும் கோரியும் சுகாதார சேவையாளர்கள் செவ்வாய்கிழமை பகல் 12 மணி முதல் 1 மணி வரை நுவரெலியா பொது வைத்தியசாலை முற்றத்தில் அடையாள பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

# சிறந்த சுய நாடக இலக்கியத்திற்கான சாகித்திய விருது வழங்கி கௌரவிப்பு



(தலவாக்கலை பி.கேதீஸ்சு

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற அரச சாகித்திய விழாவில் மாவன்புலோ செல்லம் அம்பலவாணருக்கு ‘விதை,’ என்ற நாடக நூலுக்கு 2020 ஆம் வருட சிறந்த சுய நாடக இலக்கியத்திற்கான சாகித்திய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# கைதடி நவபுரத்திலும் எரிவாயு அடுப்பு வேடித்து சிதறியது


(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கைதடி வடக்கு நவபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது.

சமையல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தருணமே எரிவாயுக் கசிவு காரணமாக எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் இதனால் எவருக்கும் பாதிப்புக்கள் எவையும் ஏற்படவில்லை.

இவ் வெடிப்புச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாதுகாப்புத் தரப்பினர் முன்னெடுத்து வருகின்றனர்.





## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 08

# இசைத்துறையின் மூத்த கலைஞர் கலாபூஷணம் தேவிகாராணி முருகுப்பிள்ளை கலைஞரின் சாதனைப் பயணம்

**ஒரு நாட்டின் மரபு மாட்சியினையும், பண்பாட்டு வளத்தையும் புலப்படுத்தும் கலைப்பிரிவுகளில் ஒன்றாக இசைக்கலை விளங்குகின்றது. இசை என்ற சொல்லுக்கு இசைய வைப்பது என்பது பொருள். மனிதனையும் மற்ற உயிரினங்களையும், ஏன் இறைவனையுமே இசைய வைக்கின்ற ஓர் அருஞ்சாதனம் இசையாகும். இசை என்பது கட்டுப்பாடுள்ள இனிமையான ஒலியாகும். அவ்வாறான இசை மனித வாழ்வை வளப்படுத்துவதற்காக இறைவன் அளித்துள்ள பெருங்கொடை என்றால் அது மிகையாகாது.**

**அவ் வகையில், திருக்கோணமலையின் தம்பலகாமம் பிரதேசத்தினை பிறப்பிடமாகவும், உவர்மலையினை வசிப்பிடமாகக் கொண்டவரும், சங்கீதகலா வித்தகரும், வாய்ப்பாட்டு வயலின் இசைக் கலைஞருமான கலாபூஷணம் திருமதி. தேவிகாராணி முருகுப்பிள்ளை கலைஞர் அவர்களின் சாதனைக் கலைப் பயணத்தின் தொகுப்பினை இங்கு காணலாம்.**





இவர் திருக்கோணமலையின் தம்பலகாமம் பிரதேசத்தில் மகேஸ்வரன் தேவகியம்மா தம்பதிகளுக்கு மகளாக 1944ஆம் ஆண்டு பிறந்தார். இவரது பாடசாலைக் கல்வியினை திருக்கோணமலை ஸ்ரீ சண்முகா வித்தியாலயத்தில் பயின்றார். (தற்போது திருக்கோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி) இவரது தாயார் வழியினூடாகவே இவருக்கு இசைஞானம் ஏற்பட்டது. பாடசாலைக் கல்வியோடு கூடவே இசைக் கல்வியையும் தொடர்ந்தார்.

இசை மீதிருந்த அதிக ஈர்ப்பினால் 8 வயதில் சங்கீதத்தினை தட்சண கான சபாவின் ஸ்தாபகரான அமரர். செல்வி இராஜ ராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்திடம் முறையாக பயின்றார். பாடசாலை முடிந்து வீடு வந்ததும் சங்கீதத்தினை கற்பதற்காக சபாவிற்குச் செல்வார். இவ்வாறாக குருவுடன் ஒன்றிணைந்ததொரு கல்வி முறையாகவே இசையினை இவர் பயின்றார். இவரது குரு சபாவில் கற்ற மாணவர்களுக்கு இலவசமாகவே கலையை கற்பித்து வந்தவர். சங்கீதம் மட்டுமல்லாமல் சமயம், கலாச்சாரம், பண்பாடு என்ற நோக்கில் பாடத்திட்டத்திற்கு உள்ளேயும், வெளியேயும் தாண்டி கற்பித்ததோடு சங்கீதத்திற்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்தவராவார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவர் அர்ப்பணிப்புடன் கற்பித்ததாலேயே அவரிடம் கற்ற இவரும் சங்கீதத்தினை உள்ளுணர்ந்து அர்ப்பணிப்புடன் பயின்றதோடு முதன்மை மாணவியாகவும் திகழ்ந்தார். குரல் வளத்தை வளப்படுத்தியதோடு கோயிலுக்குச் சென்று பஞ்சபுராணம் ஓதுதல், பஜனை பாடுதல், இசைக் கச்சேரிகளைக் கேட்டல் என்றெல்லாம் இசைக்கலையினை வளர்த்துக் கொண்டார். மேலும் இசைக் கலையினை மென்மேலும் வளர்த்துக் கொள்வதற்கான நிறைய சந்தர்ப்பம் இவருக்கு கிடைத்தது. அதன் நிமித்தம் வயலின் இசைக்கருவியினை அமரர். பாக்கியராஜாவிடம் ஐசித்திவிநாயகம்ஸ பயின்றார். இவ்வாறு முழுமையாக இசையினை பயின்று 1960இல் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையில் தரம் 5ல் அகில இலங்கை ரீதியில் விஷேட சித்தியுடன் 1ம் தர சித்தி பெற்ற ஒரே மாணவியுமாவார். 1961ஆம் ஆண்டு வாய்ப்பாட்டில் ஆசிரிய தராதரப் பரீட்சையில் சித்தியடைந்து கலாவித்தகர் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். 1963ஆம் ஆண்டுப் பகுதியில் இலங்கை வானொலி இசைக் கலைஞராகவும் வலம் வந்தார். 1966ஆம் ஆண்டு வயலின் வித்தகர் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். முதற் ஆசிரிய நியமனமாக 196%ஆம் ஆண்டு திருக்கோணமலை மூதூர் மகா வித்தியாலயத்தில் கடமை வகித்தார். அதனைத் தொடர்ந்து பல பாடசாலைகளிலும் கடமை புரிந்தார். 1987 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் (மட்டுப்படுத்தப்பட்ட) போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தார். 1990இல் திருக்கோணமலை பிராந்தியக் கல்வித் திணைக்களத்தின் அழகியற் கல்வியில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், 1998இல் திருக்கோணமலை வலயத்தின் உதவிக்கல்வி பணிப்பாளராகவும், 1999இல் திருக்கோணமலை வலயக்கல்வி அலுவலகம் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை தரம்-2 இல் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமை புரிந்து 2004இல் ஓய்வுதியம் பெற்றார். இவ்வாறாக இவரது கலைத்துறையில் தனது வளர்ச்சியனைப் பெற்றுக் கொண்டமையோடு ஓய்வு பெற்றதன் பின்னரும் இசைத்துறையில் இவரது பங்களிப்பும், சேவையும் தொடர்கின்றது.

இக் கலைஞர் மாணவர்களுக்கு இலவசமாக வாய்ப்பாட்டு சங்கீதம் மற்றும் பண்ணிசையை கற்பித்து வருபவராவார். தான் கற்ற கலையினை கலைமீது ஆர்வமும், பக்தியும் கொண்ட மாணவர்களுக்கு இலவசமாக கற்பிக்க வேண்டுமென்ற நோக்கம் இவரது குருவிடம் இருந்தே கற்றுக் கொண்டார். அவருடன் இசை பயின்ற காலத்தில் அவரின் ஒவ்வொரு கற்பித்தல் அணுகுமுறையையும் நுணுக்கமாக அவதானித்து அதனையே இவருடைய கற்பித்தல் செயற்பாட்டிலும் முன்னெடுத்து வந்தார். இவர் ஆசிரியராகவிருந்த காலத்தில் 1983 தொடக்கம் 198%இலும் பின்னர் 2004இலிருந்து மாணவர்களுக்கு வாய்ப்பாட்டு சங்கீதத்தினையும், வயலினையும் கற்பித்து வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கு தோற்ற வைத்த பெருமைக்குரியவர். திருக்கோணமலையில் இசையினை கற்பிக்கும் அநேகமான ஆசிரியர்கள் இவரது மாணவிகளாவர். தற்சமையம் நாட்டில் நிலவும் கோவிட்19யின் சூழ்நிலையினால் கற்பித்தலினை தொடர முடியாமல் இருப்பதாலும் எனினும் அவரிடம் தேடி வரும் ஆர்வமிக்க மாணவர்களுக்கு சிரமம் எதுவும் பார்க்காமல் கற்றுக் கொடுப்பதோடு துறைசார் ஆலோசனைகளையும் கூறி வருகின்றார். இதுதவிர இவர் ஆரம்ப காலத்தில் தட்சண கான சபாவிலும்; கற்பித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




இசைத்துறையில் இவர் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தமையோடு பங்களிப்பும் வழங்கியுள்ளார். வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஒலிநாடாவில் இடம்பெற்ற சிறுவர் பாடல்களிற்கு மெட்டமைத்து, ஸ்வரப்படுத்தி பங்களிப்புச் செய்தமையோடு ஒரு சில பாடல்களை பாடியமையும் மற்றும் நாட்டார் பாடல் ஒலிப்பேழை வெளியீட்டுக் குழுவில் காத்திரமான பங்களிப்பினைச் வழங்கியிருந்தார். பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கலையினூடாக சமாதானம் எனும் நடன நிகழ்விற்கு இசையமைத்து வயலின் வாசித்தார்.

இலங்கைக்கான ஆடல் தயாரித்த திரு.வேல் ஆனந்தன் அவர்களுடன் இணைந்து பாடல்கள் யாத்தமையும், இசையமைத்தையும், திருக்கோணமலை வலயக்கல்வி அலுவலகத்தில் திருக்கோணமலை வலய கீதம் இசையமைத்து ஒலிநாடா தயாரித்தமை, திரு.சிவஅன்பு, திரு.சத்தியலிங்கம் போன்ற கலைஞர்களின் கதாப்பிரசங்கங்களிற்கு பக்க வாத்தியமாக வயலின் இசைத்தமை, சித்திரைப் புத்தாண்டு நிகழ்வினை முன்னிட்டு திருக்கோணமலை அன்பு இல்ல சிறுவர்களோடு புத்தாண்டு பற்றிய விளக்கம், கொண்டாடும் முறைகள் பற்றிய ஒலி ஒளி ஆக்கம் செய்யப்பட்டு விவரணச்சித்திரமாக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் ஒளிபரப்பு செய்வதற்கு நெறியாள்கை செய்யப்பட்டமை, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ அவர்களின் ஜங்கம சேவை திருகோணமலையில் இடம்பெற்ற போது மூவின மாணவர்களை இணைத்து வரவேற்பு நடனம், வரவேற்புப் பாடல் இயற்றியமை, ஸ்ரீ சந்திரசோம விதானகே அவர்களினால் தயாரிக்கப்பட்ட குருகெதர எனும் சிங்கள, தமிழ் மூலமான நிகழ்விற்கு பாடசாலை மாணவர்களை ஒருங்கிணைத்து நிகழ்ச்சி ஒழுங்குபடுத்தியமையோடு இந்நிகழ்வு ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் பல மாதங்கள் ஒளிபரப்பு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவரது அரச சேவைக் காலத்தில் பாடவிதானத்தை அமுல்படுத்தலில் இசை ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள், செயலமர்வுகளை ஒழுங்கு செய்து நடாத்தி பாடசாலைகளில் இசை மேம்பாடடைந்து வளர பல முயற்சிகளை நல்கியுள்ளார்.

வடக்கு-கிழக்கு அமைச்சுடன் இணைந்து ஆசிரிய ஆலோசகர், உதவிக்கல்விப் பணிப்பாளர்களுக்கு செயலமர்வுகளில் வளவாளராக இருந்துள்ளார். திருக்கோணமலையில் இடம்பெறும் கலைநிகழ்வுகள் சிலவற்றிற்கு தொகுப்புரை வழங்குவதோடு சமய நிகழ்வுகளிற்கு ஆன்மீக சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இசை நடனக் கலாலயத்தின் உப தலைவராகவும், இசை நர்த்தன ஒன்றியத்தின் போஷகருமாவார். கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவினால் நடாத்தப்படும் தமிழ் திறன் போட்டிகளில் இசைக்கான போட்டிக்குரிய விடயங்களைத் தெரிவு செய்து சுற்று நிருபம் தயாரிப்பதற்கு பங்களித்தமை. திருக்கோணமலை வலயகீதம், தமிழ்த்தாய் வாழ்த்து இவற்றிற்கு இசையமைத்து ஒலிநாடா அமைக்க உறுதுணையாக இருந்தமை. அகில இலங்கை தமிழ்மொழித்தின கீதத்தின் இசையமைப்புக் குழுவில் ஒருவராக இருந்தமை. 2009 தொடக்கம் 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் வட இலங்கை சங்கீத சபையின் அனுசரணையுடன் ஐரோப்பிய நாடுகளில் நடாத்தப்பட்ட கர்நாடக இசைத் தேர்வில் பிரதம தேர்வாளர்களில் ஒருவராக பங்களிப்பு வழங்கியுள்ளார். 2015ஆம் ஆண்டு பட்டினமும் சூழலும் பிரதேச செயலக கலாசார அதிகார பேரவையில் இசைத்துறைக்கு பொறுப்பான நிர்வாக உறுப்பினராக இணைந்து செயற்பட்டமையோடு, 2016 தொடக்கம் இன்று வரை போஷகராகவும் இருந்து செயற்பட்டு வருகிறார். அத்துடன் பிரதேச செயலக கலாசார நடவடிக்கைகளில் வளவாளராக இணைந்து கடமையாற்றி வருகிறார்.

**மிகுதி 13 ஆம் பக்கம் பார்க்க...**



தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்

# இசைத்துறையின் மூத்த கலைஞர் கலாபூஷணம் தேவிகாராணி முருகுப்பிள்ளை கலைஞரின் சாதனைப் பயணம்

**12 ஆம் பக்கத் தொடர்ச்சி...**





இவர் நுண்கலை பற்றிய நூல்களையும், ஆய்வுகளையும், எழுதியுள்ளதோடு ஏனைய கலைஞர்களின் படைப்புகளுக்கு தனது பங்களிப்பையும் வழங்கியுள்ளார். தேசிய கல்வி நிருவகத்தினால் வெளியிட்ட தொலைக்கல்விப் பாடநெறி கற்றல் சாதனத்தில் கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்கள், சங்கீதத்தில் கற்பித்தல் முறைகள் எனும் நூல்களிற்கு எழுத்தாளராகவும், ஏனைய கற்றல் சாதனங்களுக்கு நூலாக்க குழு அங்கத்தவராகவும் செயலாற்றியிருந்தார். தரம் 6-13 வரை சங்கீத பாட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலிற்கு நூலாக்க குழுவில் எழுத்தாளராக செயலாற்றியிருந்தார். தொலைக்கல்விப் பாடநெறி கற்றல் சாதனம் தயாரித்தமை, 2009இல் தரம் 12, 13 சங்கீதபாட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலிற்கு பாட நிபுணத்துவ குழுவில் ஒருவராக கடமையாற்றியிருந்தார். முன்பள்ளி ஆசிரியருக்கான டிப்ளோமா கற்கை நெறியின் ஆசிரியருக்கான கைந்நூல் எழுதியுள்ளார். 199%ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட இசை விழாவில் செவ்வியல் இசை மரபில் தமிழிசை மரபு எனும் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டு பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதர பரீட்சைக்கு, 22ஸ்ருதிகள், வீணை தோற்றமும் வளர்ச்சியும் என்ற ஆய்வுக்கட்டுரையை எழுதியுள்ளார். வேறு கலைஞர்களின் படைப்புக்களில் கலாபூஷணம் கார்த்திகேசு மணிமேகலாதேவி அவர்களின் நூல்களிற்கு அணிந்துரை மற்றும் நூல் அறிமுகம் செய்துள்ளார். ஆலய கும்பாபிஷேக மலர்களிற்கு கட்டுரைகள் வழங்கியுள்ளார். திருகோணமலையிலுள்ள அநேகமான பாடசாலைகளின் கலை நிகழ்வுகளிற்கு பக்க வாத்தியமாக வயலின் வாசித்தமையோடு; குரலிசையும் வழங்கியுள்ளார்.

கலைத்துறையில் இவரது பிள்ளைகளின் பங்களிப்பாக இவரது மூத்த புதல்வர் பிரஷாந்தன் மிருதங்க கலைஞராகவும், புதல்வி விஸ்ணு விலாஷினி பரதம் பயின்றதோடு தமிழ் இன்னியத்தில் புல்லாங்குழல் வாசித்தவருமாவார். மற்றும் இவரது பேத்திகள் வாய்ப்பாட்டு வயலின், வீணை இசைத்தலினை பயின்று வருகின்றனர்.

இசைத்துறையில் இவர் பல விருதுகள், பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். 199%இல் வடக்கு-கிழக்கு மாகாணம் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் நடைபெற்ற இசை விழாவில் இவரது அரசகடமைக்கும் மேலாக கலைச்சேவையின் பங்களிப்பினை சேவையை மெச்சுதல் பாராட்டுப் பத்திரமும், 2001இல் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகார அமைச்சு நடாத்திய தமிழ் இலக்கியப் பெருவிழாவில் வெளியிடப்பட்ட நாட்டார் பாடல் ஒலிப்பேழைத் தயாரிப்பிற்கு ஒத்துழைப்பு நல்கியதற்காக பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது. 2013 இல் வட இலங்கை சங்கீத சபையினால் மூத்த கலைஞர் விருது, 2014 இல் சர்வதேச மகளிர் தினத்தின் போது பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தினால் சிறந்த பெண் மணிக்கான விருது, 2014 இல் திருகோணமலை நகராட்சி மன்றத்தினால் இசைச் சேவையைப் பாராட்டி நகர முதல்வர் விருது, சேர்ந்து வாழ் சமூக அபிவிருத்தி நிறுவனமும் உவர்மலை லியோ கழகமும் இணைந்து நடாத்திய வாழும் போதே வாழ்த்துவோம் நிகழ்வின் போது இசைச் செல்வி, கல்விச் சேவை சாதனையாளர் பாராட்டுப் பத்திரமும் வழங்கியதும், ஶ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான வேதாகமாமணி இரவிச்சந்திரக்குருக்களினால் பதவி முன்னோடி பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டது. 2016இல் இசைத்துறையில் கலாபூஷண அரச விருதும், தமிழருவி சொற்கணை-2017இல் அகில இலங்கை ரீதியாக திருக்கோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற விவாதச்சமர் நிகழ்வில் கௌரவிப்பு பாராட்டு மடலும், அதே ஆண்டில்; கிழக்கு மாகாண வித்தகர் விருதும் கிடைக்கப் பெற்றதாகும். மேலும் கலாபூஷணம் திருமலை நவம் எழுதிய திருகோணமலை கலை இலக்கிய வரலாறு நூலில் இசைமரபு எனும் விடயப்பரப்பிலும், கலாபூஷணம் மணிமேகலா தேவி கார்த்திகேசு எழுதிய திருகோணமலையின் இசைப்பாரம்பரியம் எனும் நூலிலும் இக் கலைஞரின் கலைத்துறை சேவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.





இவரது அனுபவத்தினூடாக சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இக் கலைஞர், மாணவர்களுக்குரிய வழிகாட்டி ஆசிரியரேயாவர். நாளைய சந்ததியினரை திறம்பட உருவாக்கும் கடமை ஆசிரியருக்கேயுண்டு. சங்கீத பாட அமைப்பிலும், பயிற்சி முறைகளிலும் தெளிவாக இருத்தல் வேண்டும். மாணவர்களை ஏற்றத் தாழ்வின்றி சமமாக நடத்த வேண்டும். கற்பிக்கும் போது குருவாகவும், மீதி நேரங்களில் மாணவர்களுடன் சகஜமாக பழகுபவராகவும் கருணையோட சேர்ந்த கண்டிப்பு இருத்தல் வேண்டும். கற்பிக்கும் மாணவர்களுக்கு தன்னுடைய குணாதிசயங்களை வெளிப்படுத்தி தன்னை பெருமைப்படுத்தக் கூடாது. பாடம் சம்மந்தமாக மாணவர்கள் கேட்கும் வினாக்களை கிரகித்து அதற்குரிய பதிலை அளிக்க வேண்டும். பேச்சிலும் செய்கையிலும் மாணவர்கள் மதிக்கும் தன்மை இருத்தல் வேண்டும். 10 பேர் ஒன்றாக பாடினாலும் எந்த இடத்தில் ஸ்ருதி சுத்தம் இல்லாமல் இருக்கின்றது என்று கண்டறிந்து அவ்விடத்திலே சரியாக பாடும் வரை சலிக்காமல் திருத்த வேண்டும். எந்த பாடத்தை கற்பிக்கப் போகிறீர்களோ அதனை முதல் நாளே தயார் செய்து கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவனின் பலம், பலவீன நிலையை அறிந்து அதன்படி செயற்பட வேண்டும். மகிழ்ச்சிகரமாக கற்பிக்க வேண்டும். இசையோடு சேர்ந்து நமது கலாச்சாரம், பண்பாட்டையும் மாணவரிடத்தில் திளைத்து எதிர்கால உலகிற்கு திறமையான சிறந்த கலைஞனை உருவாக்கும் கடமை ஆசிரியர்களுக்கேயுண்டு. இதன் மூலமாக மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக ஆசிரியர்கள் திகழ்வார்கள். இதுவே எனது அனுபவத்தினூடாக நான் கண்ட உண்மையாகும் எனக் கூறுகிறார்.

நவீனமயமாக்கப்பட்ட தற்காலத்தில் பாரம்பரியக் கலைகள் நலிவடைந்து செல்லும் தருணத்தில் அவற்றை சீர்செய்வதற்குரிய நடவடிக்கைகளாக இக் கலைஞர் கூறுவதாவது, அழகியற் கல்வி என்பது சங்கீதம், நடனம், சித்திரம். இதனைக் கொண்டே பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டுக் கூத்தின் திருத்திய வடிவமே நடனம் ஆகும்;. கிராமியப் பாடல்களின் பரிணாம வடிவமே இசை. கட்டாயக்கல்வி முறையினுள் இவ் மூன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்போது உயர் தரத்தில் நாடகமும் அரங்கியலும் எனும் விருப்பத்துக்குரிய பாடச்சேர்க்கையாக உள்ளது. வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இணைந்து செயற்பட்ட வேளைகளில் தமிழ்மொழி தினங்களிலும், கலை சார் நிகழ்ச்சிகளிலும் பாரம்பரிய கலைகளான நாட்டுக்கூத்து, வடமோடி, தென்மோடி, கொம்பு முறி, சிலம்பம் விளையாட்டுக்கள் போன்ற கலை நிகழ்வுகளை நடாத்தி வந்தனர். தற்போது இரண்டு அமைச்சும் பிரிந்ததனால் அவ்வாறான கலை நிகழ்வுகளைக் காண்பது குறைவாகவுள்ளது. அதிலும் திருகோணமலையில் காண்பது மிக அரிதாகவே உள்ளது. எனினும் இருக்கின்ற வளங்களைக் கொண்டு பாடசாலையில் நடைபெறும் விழாக்களிலும், கலை மன்றங்களினால் நடாத்தப்படும் நிகழ்வுகளிலும், ஏனைய கலை நிகழ்ச்சிகளிலும் நலிவடைந்து செல்கின்ற கலைகளை அரங்கேற்றலாம். திருகோணமலையில் ஏராளமான கலைஞர்கள் வெளிச்சத்திற்கு வராமல் புரையோடிக்கிடக்கின்றனர். அவர்களை வெளிக்கொண்டு வருவதன் மூலமாக கலைகளையும் புத்துயிர் அடையச் செய்ய முடியும். இதற்கு சம்மந்தப்பட்டவர்களும், ஊடகங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நம் மண்ணுக்கு சொந்தமான பாரம்பரிய கலைகள் இன்னும் இங்கேதான் புதைந்து கிடக்கின்றன. அக் கலைகளை ஒரு விருட்சகமாக மாற்றும் திறனும், சக்தியும், மாணவர்களுக்கும், இளைய சமுதாயத்தினருக்கும் இருக்கின்ற ஓர் தலையாய கடமையாகும். எனக் கூறுகிறார்.

இவ்வாறாக, திருக்கோணமலை மண்ணுக்கு அளப்பரிய சேவையாற்றி அழியாப் பெருமையையும், புகழையும் தேடித்தந்து, அரச சேவை பணி புரியும் காலத்திலும், ஓய்வு பெற்ற பின்பும் இசைத்துறையின் மீது கொண்ட தனிக்க முடியாத தாகத்தினால் இன்றும் இத்துறையின் மீது எல்லையில்லாத ஆர்வத்துடனும், சலிப்பின்றிய புன்னகையுடனும் கலைச்சேவையாற்றிக் கொண்டு இன்றும் தனது இசைப் பயணத்தை மேற்கொண்டு வரும் இவர் மேலும் கலைப்பணி செய்ய நீண்ட ஆயுளையும், தேக ஆரோக்கியத்தையும் பெற வேண்டுமென பிரார்த்திப்பதோடு இப் பணித்தொடர இக் கலைஞரை வாழ்த்துவோம்.

**தொடரும் கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு....**



## திருமலை உட்துறைமுக வீதியில்

# மக்களை அச்சுறுத்தும் ஆபத்தான குழி

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தல்





(கதிரவன்)

திருகோணமலை உட்துறைமுக வீதியில் எட்டு அடுக்கு உல்லாச விடுதி அமைக்க 2018 தைப்பூசத்தின் போது அத்திபாரமிடப்பட்டது.கட்டிட நிர்மாணத்திற்காக இப்பிரதேசம் 10 அடிக்கு மண் அகழ்வுக்கு உள்ளானது.

வேலை ஆரம்பிக்கும் தறுவாயில் கடற்படை கரையோரம் பேணல் அதிகாரசபை நகர அபிவிருத்தி அதிகாரசபை என்பன தலையிட்டு பணியினை நிறுத்தியிருந்தனர். பின்னர் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டு தாக்குதல்



கொவிற் பெருநோய் தாக்கம் காரணமாக நிர்மான வேலைகள் முற்றாக இடைநிறுத்தப்பட்டு இருந்தது.

பெய்து வரும் பெருமழை காரணமாக மண்அகழப்பட்ட குழி நீரால் நிறைந்து குளமாக மாறியது. தற்போது மண் இடிந்து பின்னால் உள்ள தனியார் வளவில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த 4 தூண்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன் மலகூடமும் இடிந்து வீழ்ந்துள்ளது. அருகில் உள்ள இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கட்டிடத்திற்கும் செய்யப்படக் கூடிய வாய்ப்பு உள்ளது பக்கத்தில் வெலிங்டன் அடை வீதியில் புனித சூசையப்பர் கல்லூரி மாணவர்கள் தரித்து நிற்கும் நிலைமை காணப்படுகின்றது. காரணமாக மாணவர்கள் அர்த்தம் கொடுக்கக் கூடிய வாய்ப்பும் ஏற்பட சந்தர்ப்பம் உள்ளது.

இது சம்பந்தமாக அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னதாக குறித்த நிறுவனத்திற்கு பின் பின் பல முறைப்பாடுகள் செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை திருகோணமலை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது அங்கும் போதியளவு நடவடிக்கை எடுக்கவில்லை இதனால் திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் காணி உரிமையாளர் வழக்கு ஒன்றை பதிவு செய்திருந்த அவர்கள் இடத்தை நடவடிக்கை காரணமாக இது நீதிமன்ற விசாரணை வரை சென்றுள்ளது. விரைவில் இதற்கான தீர்வு காணப்படாத விடத்து பெரும் அனர்த்தம் ஒன்று ஏற்படக் கூடிய நிலை உருவாகலாம். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னர் சுமுக நிலையை ஏற்படுத்துவார்கள் என்று சமூக ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

## சாய்ந்தமருது அல்-மத்ரஸதுத் தாவூதிய்யாவின் முதலாம் ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அல்-மத்ரஸதுத் தாவூதிய்யா குர்ஆன் மத்ரஸாவின் முதலாம் ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும் ஞாயிற்றுக் கிழமை சாய்ந்தமருது -11, கல்யாண வீதியில் அமைந்துள்ள மத்ரஸா வளாகத்தில் இடம் பெற்றது.

அல்-மத்ரஸதுத் தாவூதிய்யா குர்ஆன் மத்ரஸாவின் அதிபர் எஸ்.ஏ.ஹனீப் ஸனா (ஸஃதி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை குல்லியத்துல் அரபுக் கல்லூரியின் அதிபர் அல்-ஆலிம் முப்தி கே.எல்.எம். சியானுத்தீன் (ஹாஷிமி) மற்றும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பல் வைத்தியர் டாக்டர் எம்.ஐ.எம். ஹபீல் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது அல் - குர்ஆனை முழுமையாக ஓதி முடித்து, சில ஜுஸுக்களை மனனம் செய்த மாணவர்களான சுல்பிகார் பாத்திமா அம்னத் இபா, உவைஸ் பாத்திமா மில்ஹத் ஸராபா, ராபி முஹம்மத் ஆதில் அம்ஹர், இஸ்ஸத் முகம்மட் லரீப் பாத்திமா





லபீபா, அப்துல் மஜீத் அப்துர் ரஹ்மான், எம்.ஆர்.எம். ஹாஷிப் பழீலுர் றிஜால், முஹம்மத் ஹபீழ் முஹம்மத் ஆகிய மாணவர்களுக்கு கேடயங்களும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கி அதிதிகளால் கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு, மாணவர்களின் திறமைகள் நிகழ்வில் வெளிக்காட்டப்பட்டதோடு, அவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

வருடா வருடம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு, மிக குறுகிய காலத்தில் அல்-குர்ஆனை ஓதி முடிப்பதற்கும், ஜுஸுக்களை மனனம் செய்வதற்கும் அல்-மத்ரஸதுத் தாவூதிய்யா குர்ஆன் மத்ரஸாவின் அதிபர் எஸ்.ஏ.ஹனீப் ஸனா (ஸஃதி) சிறந்த முறையில் செயற்பட்டு வரும் முயற்சி பாராட்டத்தக்கது. ஈருலகிலும் நன்மைகளை கொடுக்கக் கூடியது என நிகழ்வில் உரையாற்றிய சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பல் வைத்தியர் டாக்டர் எம்.ஐ.எம். ஹபீல் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெற்றோர்கள், மாணவர்கள், மௌலவியாக்கள், உலமாக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தமை விஷேட அம்சமாகும்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.பி.எம். றின்ஸான் மற்றும் அயாஹ் எப்.எம்.பணிப்பாளர் அஸ்மத் சஹ்மி மஜீத் ஆகியோர் நிகழ்வை சிறப்பாக தொகுத்து வழங்கினர்.

## தம்பலகாமம் எரிவாயு வெடிப்புச் சம்பவத்தில் சேதம்

திருகோணமலை தம்பலகாமம் சிராஜ் நகர் பகுதியில் எரிவாயு வெடிப்புச்சம்பவம் ஒன்று திங்கள் 11.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் உறங்கும் போது திடீர் சத்தம் ஒன்று கேட்டது அதன் பின் அடுப்பங்கரையில் உள்ள எரிவாயு வெடித்ததில் அடுப்பும் உடைந்து சேதமாக்கப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார். எரிவாயு கசிந்து இவ் வெடிப்பு இடம் பெற்றிருக்கலாம் என தெரியவருகிறது.

சம்பவ இடத்துக்கு தம்பலகாமம் பொலிசார் சென்று விசாரனைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மத்தியஸ்தசபை பற்றிய கிராம மட்ட விழிப்புணர்வு கலந்துரையாடல்

(பாறுக் ஷிஹான்)

நீதி அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற மத்தியஸ்த சபை ஆணைக் குழுவின் மத்தியஸ்தசபை பற்றிய கிராம மட்ட விழிப்புணர்வு கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன் படி மத்தியஸ்தசபை பற்றிய கிராம மட்ட விழிப்புணர்வு கலந்துரையாடலானது செவ்வாய்க் கிழமை நீதி அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற மத்தியஸ்த சபை ஆணைக் குழுவின் கல்முனை வடக்கு பிரதேச



செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ந. இராஜ்குமாரின் ஏற்பாட்டில் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய வளாகத்தில் நடைபெற்றது.

இதன் போது மத்தியஸ்தசபை பற்றிய விழிப்புணர்வு மற்றும் மத்தியஸ்தசபை செயற்பாடுகள், பிணக்குகளை எவ்வாறு ஆற்றுப்படுத்துதல் போன்றவை பாண்டிருப்பு 02 கிராம சேவகர் பிரிவு மக்களுக்கு தெளிவு படுத்தப்பட்டது.

குறித்த விழிப்புணர்வு கலந்துரையாடலில் கல்முனை மத்தியஸ்தசபை தவிசாளர் இ. சந்திரசேகரம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மக்களுக்கு பல்வேறு தெளிவூட்டல்களை வழங்கினார்.

## திருமலையில் 5கிலோ கிராம் கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது...

(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அபயபுர பகுதியில் 5 கிலோ கேரளா கஞ்சாவுடன் சந்தேகநபரொருவரை கைது செய்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர். (07) மாலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

03ஆம் கட்டை பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் ஒன்றில் கஞ்சா போதைப்பொருளை கொண்டு வரும் சந்தர்ப்பத்தில் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் திருகோணமலை பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த சந்தேகநபரின் மோட்டார் சைக்கிளை சோதனையிட்டபோது அவரிடம் இருந்து 5 கிலோ கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும் திருகோணமலை பிராந்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 03 கட்டை பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் குறித்த சந்தேக நபரிடமிருந்து புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் நாளை புதன்கிழமை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொது நூலகத்தால் போட்டிகள்

(சாவகச்சேரி நிருபர்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொது நூலகத்தினால் பாடசாலை மட்டத்திலும்,பாடசாலைக்கு வெளியேயும் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பிரிவு 1(10-12 வயது), பிரிவு 02-(13-14 வயது) ,பிரிவு 03-(15-30வயது) ஆகிய மட்டங்களில் கவிதை,கட்டுரை,சிறுகதைப் போட்டி,சிறந்த வீட்டு நூலகம் மற்றும் சிறந்த வீட்டுத்தோட்டப் போட்டிகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தங்களது பெயர் விபரங்களை சாவகச்சேரி பொது நூலகத்தில் வழங்கி போட்டிக்கான நிபந்தனைகளையும் பார்வையிட முடியும்.அத்துடன் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இலவச நூலக அங்கத்துவமும் நூலகத்தால் வழங்கப்படுவதனால் வாசகர்கள் இலவச நூலக அங்கத்துவத்தைப் பெற்று பயனடையுமாறும் நூலகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.